# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
## ANNUAL PERFORMANCE REPORT

# 2024




**අපනයන කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව**
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
**DEPARTMENT OF EXPORT AGRICULTURE**

+ 94 812 388651 direxag@sltnet.lk www.dea.gov.lk



කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය
விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation

# 2024

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT


අපනයන කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
**DEPARTMENT OF EXPORT AGRICULTURE**

කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය
விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
**Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation**

## உள்ளடக்கம் பக்கம்


01. அத்தியாயம் - நிறுவனத்தின் விபரம் /நிறைவேற்றுப் பொழிப்பு 05
1.1. அறிமுகம் 05-06
1.2. நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி, நோக்கம் 07
1.3. பிரதான செயற்பாடுகள் 08
1.4. நிறுவன ஒழுங்கமைப்பு 09
1.5. திணைக்களத்தின் பிரதான அலகுகள் மற்றும் நிறுவனங்கள் 10
1.5.1 திணைக்களத்தின் பிரதான அலகுகள் 10
1.5.2 மாவட்ட பணிமனைகள் 10

02. அத்தியாயம் - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம் 11
2.1 சிறப்புச் சாதனைகள் மற்றும் அவற்றினை அடைந்து கொள்ளல். 11-24
2.2. சவால்கள் மற்றும் எதிர்கால இலக்கு 24
2.2.1 சவால்கள் 24-25
2.2.2 எதிர்கால இலக்குகள் நோக்கங்கள் 25-27

03. அத்தியாயம் - நிதிச் செயலாற்றுகை 29
3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை 29
3.2 நிதி நிலமைக் கூற்று 30
3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று 31
3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் 32
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை 32
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 32
3.7 நிபி.குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் மாவட்டச் செயலகம் மகாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு 32
3.8 நிதியல்லா சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை 32
3.9 கணக்காய்வாளர் அறிக்கை 33-42

04. அத்தியாயம் - செயலாற்றுகை சுட்டிகள் 43
4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டு திட்டத்தின் அடிப்படையில்) 43
4.1.1 ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டம் 43-48
4.1.2 கட்டட நிர்மானம், திருத்த வேலை, காணி அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் 49

05. அத்தியாயம் - பேண்தகு அபிவிருத்தி இலக்குககளை (SDG)அடையும் 51
5.1 திணைக்களத்திற்கு அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 51-52
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் 52-54

06. அத்தியாயம் - மனிதவள விபரம் 55
6.1 பதவியணி முகாமைத்துவம் 55
6.2 நிறுவனத்தின் செயலாற்றுகை மனித வள பற்றாக்குறை பாதிக்கும் முறை 55
6.3 மனிதவள அபிவிருத்தி 55-58

07. அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை 59-64
இணைப்பு 01 - ஏற்றுமதி விவசாய பயிர்களின் ஏற்றுமதி இறக்குமதி அளவு 65

# அத்தியாயம் 01

# நிறுவன விபரம்/செயற்பாட்டுச் சுருக்கம்

## 1.1. அறிமுகம்.

பண்டைய காலம் தொட்டே இலங்கை கறுவாச் செய்கையில் புகழ் பெற்றிருந்தது. தேசிய மட்டத்தில் இத்தொழில் துறைக்கு 1971 இல் தேசிய விவசாயக் கொள்கையின் கீழ் கவனம் செலுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, 1972 ஆம் ஆண்டில், அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றின் மூலம் தோட்டத் தொழில்துறை அமைச்சுடன் இணைந்ததாக சிறு ஏற்றுமதி பயிர்கள் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களம் விவசாய அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. உலக உணவுத் திட்டம் (WFP) மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) ஆகியவற்றால் ஆரம்பிக்கப்பட்ட பயிர் பல்வகைப்படுத்தல் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியை திணைக்களத்திற்கு கையளிப்பதோடு அப்போது திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்த எல்லை நிலங்களில் வாசனைத் திரவியங்கள் பயிரிடுவதற்குப் பதிலாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகள் வாசனைத் திரவியங்கள் சார்ந்த பயிர் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி பயிர் வளர்ச்சியில் ஒரு முன்னோடியாக இருந்தது.

1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் திணைக்களமானது ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் என மறு பெயரிடப்பட்டது. அதனூடாக வாசனைத் திரவியங்கள் மற்றும் ஏனைய விவசாய பயிர்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான சட்ட அதிகாரத்தை அது வழங்கியது. அப்போதிருந்து, திணைக்களம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கமைய வாசனைத் திரவிய துறையில் பிரபல்யம் அடைந்து அதன் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் தொடர்பில் நாடலாவிய ரீதியில் வளையமைப்பு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் திணைக்களம் இத்துறையில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு வசதிகளை செய்து கொடுக்கின்றது.

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் பிரதானமாக கறுவா, மிளகு, கிராம்பு, சாதிக்காய், ஏலக்காய், கோப்பி, கொக்கோ, வெற்றிலை, பாக்கு, வெனிலா, பெங்கிரி, சேர, குரக்காய், கித்துல், இஞ்சி மற்றும் மஞ்சள் போன்ற பயிர்களை வாசனைத் திரவிய பயிர்களாக ஏற்றுமதி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இங்கு திணைக்களத்தின் பெறும் பொறுப்பாக ஏற்றுமதி விவசாய பயிர் செய்கையின் நிலப் பரப்பினை விஸ்தரிப்பதாகும். செய்கைப் பண்ணப்பட்டுள்ள பயிர்களில் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள், அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப மேம்பாட்டை அபிவிருத்தி அடையச் செய்தல் மற்றும் புதிய இனங்களை இனங்காணல் அதிக அறுவடையை தரக்கூடிய தொழில்நுட்ப அறிவு, புதுமைகள் மற்றும் பயிர் வகைகளை ஏற்றுமதி விவசாய பயிர் துறைக்கு அறிமுகப்படுத்துவது போன்ற கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

அதற்கு அமைய 2024 ஆம் ஆண்டு திணைக்களத்தின் பொருட்டு நேரடியாக வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ரூபா 517 மில்லியன் ஒதுக்கீட்டின் ஊடாக திணைக்களத்தின் மொத்த மூலதன மதலீட்டு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. உற்பத்தி இயலளவை மேம்படுத்துதல் அதன் மூலம் ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல் மூலம் திணைக்களத்தின் பிரதான இலக்கினை அடைந்து கொள்கின்ற போது பயிர்ச் செய்கை பரப்பளவினை வருடாந்தம் அதிகரிக்கும் பொருட்டு செலுத்தப்பட்ட அவதானங்கள் மற்றும் ஒப்பீட்டளவில் ஏற்றுமதி பயிர்களின் பெறுமதி சேர்க்கப்படட உற்பத்திகளை உயர்த்துவதன் ஊடாகவும் மற்றும்

தரமான உற்பத்திகளை மேம்படுத்துவதன் ஊடாகவும் அதிகளவிலான சந்தை வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் 2024 ஆம் ஆண்டு விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

காலநிலை மாற்றம் மற்றும் சந்தை விலைகளின் தாக்கம் காணப்பட்ட போதிலும் 2024ஆகின்ற போது ஏற்றுமதி வருவாய் ரூபா 157,199.30 மில்லியனாக அதிகரித்துக் கொள்ள முடியுமாக இருந்தது.

## 1.2. நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி, நோக்கம்

### இலக்கு

பலசரக்கு மற்றும் அது தொடர்பான உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றது.

### செயற்பணி

அதிகளவில் அந்நியச் செலாவனியை பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் துறையில் ஈடுபட்டுள்ள சகல பங்குதாரர்களும் நிலையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் முன்னோக்கிச் சென்று, சூழலை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஏற்றுமதி விவசாய உற்பத்திகளின் அளவிலும் மற்றும் தரத்திலும் அபிவிருத்தியை மேற்கொள்வதன் நிமித்தம் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை திட்டமிடுதல் மற்றும் செயற்படுத்துதல்.

### நோக்கம்

ஏற்றுமதி அளவினை அதிகரித்தல் மற்றும் உற்பத்தியின் தரத்தினை உயர்த்துவதன் ஊடாக உச்ச அளவிலான அந்நியச் செலாவனியை உழைப்பதன் பொருட்டு ஏற்றுமதி விவசாய பயிர் அலகினை அபிவிருத்தி செய்தல்.

## 1.3. பிரதான செயற்பாடுகள்

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் ஒழுங்கமைப்பு, விவசாய மேம்பாடு, மற்றும் செயன்முறை.
- பயிர் மேம்பாடு, பயிர் வளர்ப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடைக்குப் பின்னரான அனுகுமுறை மற்றும் சமூக பொருளாதாரம் என்பவற்றின் மீது பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- உயர் தரமான நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் வினியோகித்தல்.
- பயிர் உற்பத்தி, உற்பத்தித் திறன் மேம்பாடு, மற்றும் தர மேம்பாடு என்பவற்றின் மீது ஏற்றுமதி விவசாய பயிர் உதவி திட்டத்தை அமுலாக்கல்.
- பயிர் பாதுகாப்பு ஆலோசனை சேவை வழங்குதல்.
- ஒருங்கினைந்த பீடை முகாமை மேம்படுத்துதல்.
- ஒருங்கினைந்த தாவர போசனை முகாமை.
- சேதன பண்ணைகளை மேம்படுத்துதல்.
- சந்தைப்படுத்தல், தரநிர்ணயம் மற்றும் விலை போன்றவற்றில் தரவுகள் வெளிப்படுத்துதல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் உற்பத்தி நடுகைப் பொருட்கள் போன்றவற்றினை இறக்குமதி செய்வதில் நின்றும் கட்டுப்பாடு விதித்தல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர்களில் உற்பத்தி செயன்முறை மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளோர். மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கும் பயிற்சிகளை வழங்குதல்.
- தோட்டத்துரையினுள் ஏற்றுமதி விவசாய பயிர்களில் மேம்பாட்டிற்காக ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மத்தியில் உறுதியான இணைப்பை ஏற்படுத்துதல்.
- 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருத்தல்.
- ஏற்றுமதி விவசாய பயிர் தொடர்பான கொள்கை விடயங்களில் ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஆலோசணைகள் வழங்குதல்.
- தொழில்நுட்ப மாதிரித் தோட்டங்களை பராமரித்தல்

## 1.4. நிறுவனஒழுங்கமைப்பு




**பி.ப.நி**-பிரதிப் பணிப்பாளர் நிதி,**பி.ப.தொ**-பிரதிப் பணிப்பாளர்,**பி.ப.ஆ**-பிரதிப் பணிப்பாளர் ஆய்வு,**பி.ப.நி**-பிரதிப் பணிப்பாளர் நிதி,**உ.ப**-உதவிப் பணிப்பாளர்,**அபி**-அபிவிருத்தி,**திட்**-திட்டமிடல்,**க.அ**-கன்காணிப்புஅலகு,**ஊ.பி**-ஊடகப் பிரிவு,**ப.பா**-பயிர் பாதுகாப்பு,**ம.ஆ.நி**-மத்தியஆய்வுநிலையம்,**ஆ.உ.அ**-ஆய்வு உப அலகு,**பொ.ஆ.அ**-பொருளாதாரஆய்வுஅலகு,பள்ளி-புள்ளிவிபரவியலாளர்,**வி.ஆ.உ.தி.உ.**-விவசாயஆராய்ச்சிஉற்பத்தித்திறன் உத்தியோகத்தர்,**நி.உ.ம.வ**-நிர்வாகஉத்தியோகத்தர் மனிதவள,**நி.உ.பௌ.வ**.-நிர்வாகஉத்தியோகத்தர் பௌதீகவள,**ஆ.அ.உ**.-ஆய்வுஅபிவிருத்திஉதவியாளர்,**அ.உ**.-அபிவிருத்திஉதவியாளர்,**வ.செ.தி.உ**.-வரவுசெலவுதிட்டஉதவியாளர்,**தொ.உ**.- தொழில்நுட்பஉத்தியோகத்தர்,**மு.உ**.-முகாமைஉதவியாளர்,**உ.க.ஆ**.-உள்ளககணக்காய்வுஉதவியாளர்,**நூ**-நூலகர்,**வி.உ**.-விரிவாக்கல் உத்தியோகத்தர்,**ஆ.உ**.-ஆய்வுஉதவியாளர்,**த.நி.ப**- தரவுநிரற் படுத்துனர். **ப.சே.உ**.-பண்ணைசேவைஉதவியாளர்

## 1.5. திணைக்களத்தின் பிரதான அலகுகள் மற்றும் நிறுவனங்கள்

### 1.5.1. திணைக்களத்தின் பிரதான அலகுகள்

1. அபிவிருத்தி அலகு
2. ஆராய்ச்சி அலகு
3. நிர்வாக அலகு
4. கணக்கீட்டு அலகு

### 1.5.2. மாவட்டப் பணிமனைகள் 17 பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| மத்திய மாகாணம் | - | கண்டி, மாத்தளை, நுவரெலியா |
| சப்ரகமுவ மாகாணம் | - | கேகாலை, இரத்தினபுரி |
| ஊவா மாகாணம் | - | பதுளை, மொனராகலை |
| தென்மாகாணம் | - | காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை |
| மேல்மாகாணம் | - | கொழும்பு, களுத்துரை, கம்பஹ |
| வடமேல் மாகாணம் | - | குருனாகலை, (புத்தளம் மாவட்டம் உள்ளடங்கலாக) |
| கிழக்கு மாகாணம். | - | அம்பாறை (மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடங்கலாக) |
| வடமத்திய மாகாணம் | - | அனுராதபுரம், பொலன்னறுவை |

### ஆய்வு நிலையங்களினதும் மற்றும் உப அலகுகளினதும் அமைவிடம் வருமாறு

1. மத்திய ஆராய்ச்சி நிலையம் - மாத்தளை
2. இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையம், தம்பலஸ்ஸ, நாரம்வலை
3. பொருளாதார சந்தை ஆய்வு அலகு, தலைமை பணிமனை, பேராதனை
4. மலையக ஆராய்ச்சி நிலையம், தெல்பிடிய, கம்பளை.
5. தசை வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் மற்றும் நாற்று மேடை, வல்பிட, கம்பஹா
6. உப ஆராய்ச்சி நிலையம், குண்டசாலை
7. உப ஆராய்ச்சி நிலையம், நில்லம்பே கலஹா

### திணைக்களத்தின் மத்திய செடி வளர்ப்பு நிலையங்களின் அமைவிடம்.

| | | |
|---|---|---|
| குருனாகலை மாவட்டம் | - | செராபீஸ் செடி வளர்ப்பு நிலையம், பொல்கஹவெலை, |
| | - | ஹொலொன்கொல்ல செடி வளர்ப்பு, தொடன்கஸ்லந்த, |
| | - | வென்னொருவ செடிவளர்ப்பு நிலையம், நாரம்வலை |
| நுவரெலியா மாவட்டம் | - | பிளக்வோட்டர், செடி வளர்ப்பு நிலையம் கினிஹத்ஹேன, |
| | - | முல்ஹுல்கெலே, செடி வளாப்பு நிலையம் வலபனை |
| மாத்தளை மாவட்டம் | - | மத்திய செடி வளர்ப்பு நிலையம் - எல்வெல, உக்குவலை |
| மாத்தறை மாவட்டம் | - | மத்திய செடி வளர்ப்பு நிலையம் - மாபலான, கம்புருபிடிய |
| கேகாலை மாவட்டம் | - | மத்திய செடி வளர்ப்பு நிலையம் - கஸ்நேவ, நெலுந்தெனிய |
| கம்பஹ மாவட்டம் | - | மத்திய செடி வளர்ப்பு நிலையம் - வல்பிடிய |
| ஹம்பந்தோட்டை மாவட்டம் | - | ம.செ.வ.நிலையம் மற்றும் வாசனைத்திரவிய பூங்கா – மித்தெனிய |

# அத்தியாயம் 02
# செயலாற்றுகை மற்றும் அடுத்த இலக்கு

## 2.1 சிறப்பு சாதனைகள் மற்றும் கையகப்படுத்துதல்

- 2024 ஆம் ஆண்டின் ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு பொது திறைசேரியில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 400.00 மில்லியன் ஒதுக்கீட்டில் இருந்து பயிர்ச் செய்கை கருத்திட்ட வேலைத்திட்டங்கள், மத்திய நாற்றுமேடை அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட வேலைத்திட்டம், தகவல் தொடர்பாடல் மற்றும் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் போன்றவற்றிற்காக ரூபா 368.0723 மில்லியன் செலவிடப்பட்டன. அது திணைக்களத்திற்கு பெற்றுத் தரப்பட்ட மொத்த ஒதுக்கீட்டின் 92% ஆகும்.

- அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட ஏற்றுமதி விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு ரூபா 35.00 மில்லியனில் இருந்து அலுமினிய ஏணிகள், மிளகு உலர்த்திகள், புல் வெட்டும் இயந்திரங்கள், மிளகு விதை பிரிப்பான்கள், களையெடுக்கும் இயந்திரங்கள், துருப்பிடிக்காத இரும்பு பேசின்கள், துருப்பிடிக்காத இரும்பு மேசைகள் மற்றும் ஈரப்பத பகுப்பாய்விகள் போன்ற அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு இதன்' பொருட்டு ரூபா 6.5 மில்லியன் செலவிடப்பட்டது.

- 2024, ஜூலை 31 ஆம் திகதி வரை கறுவா பயிருக்கு பயனாளிகளுக்கு செலுத்த வெண்டிய நிலுவைத் தொகையை செலுத்திய பிறகு, ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கறுவாச் செடிகள் வழங்கப்பட்டன.

- பயிர்ச் செய்கை நிலப்பரப்பளவை அதிகரிப்பதற்காக 2024 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட ஏற்றுமதி பயிர் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் புதிய பயிர்ச் செய்கைத் திட்டம், சிறிய அளவிலான வீட்டுத் தோட்டச் செய்கைத் திட்டம், ஏற்றுமதி பயிர் ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் பாக்கு செய்கைத் திட்டம் போன்றன செயல்படுத்தப்பட்டன. அதற்கு அமைய மொத்த வேலைத்திட்டத்தினதும் நிதி இலக்கான ரூபா 192.82 மில்லியனில் இருந்து ரூபா178.52 மில்லியன் செலவிடப்பட்டது.

  புதிய செய்கை வேலைத்திட்டத்தின் கீழ்,1731 ஹெக்டேயர் செய்கை நிலப் பரப்பளவில் 1321.59 ஹெக்டேயர் நிலப் பரப்பளவில் புதிய செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது இலக்காகக் கொண்ட பயிர்ச் செய்கை நிலப் பரப்பளவில் 76.35% ஆகும்.

வீட்டுத் தோட்டத்திலிருந்தே வீட்டு நுகர்வுக்கான வாசனைத்திரவிய பொருட்களை உற்பத்தி செய்தல், வீட்டுத் தோட்டத்தில் சிறிய அளவிலான பொருளாதார செய்கையை மேற்கொள்ளல், ஏற்றுமதி பயிர்களை கொத்து கிராமங்களாக பயிரிடுதல், நில உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதி பயிர்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு சிறிய அளவிலான வீட்டுத் தோட்டத் பயிர்ச் செய்கை வேலைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ்,தீவு முழுவதையும் உள்ளடக்கியதாக மாவட்ட ரீதியில் பொருளாதார ரீதியாக உற்பத்தித் திறன் கொண்ட ஏற்றுமதி பயிர் மாதிரித் தோட்டங்களை நிறுவுவதற்காக மிளகு, வெண்ணிலா,கோப்பி, வெற்றிலை, கிராம்பு,கொக்கோ,குரக்காய்,சாதிக்காய் மற்றும் மஞ்சள் போன்ய பயிர் செய்கைகளுக்காக ஏற்றுமதி பயிர் நடுகைப் பொருட்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. இந்தத் திட்டத்திற்காக 1,121,666 ஏற்றுமதி விவசாயப் பயிர் நாற்றுகளை வழங்குவதே இதன் மொத்த இலக்காகும். அந்த நடுகைப் பொருள் அளவில் 899,775 விவசாயிகளுக்கு வழங்க முடிந்தது, இது இலக்குத் தொகையில் 79.33% ஆகும்.

ஏற்றுமதிக்கான பாக்கு உற்பத்தியை அதிகரித்தல், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் மண் மற்றும் நீர் பாதுகாப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பாக்கு செய்கைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒற்றைச் செய்கை, ஊடுபயிர் செய்கை, கலப்பு பயிர் செய்கை, வீட்டுத் தோட்டங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்கள், அரசுத் தோட்டங்கள்,கம்பனித் தோட்டங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் நடுவதற்கு பாக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அதன்படி, இதன் கீழ்,2024 ஆம் ஆண்டில் 1,662,200 பாக்கு மரக்கன்றுகள் நடுதல் என்ற இலக்கில் 1,532,525 பாக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன, இது மொத்த இலக்கில் 92.19% ஆகும்.

- உயர்தர அறுவடையைப் பெறுவதற்கு களத்தில் தரமான நடுகைப் பொருட்களை ஸ்தாபிப்பது முக்கியம் ஆகும். அத்துடன் 2024 ஆம் ஆண்டில், விவசாயிகளுக்கு உயர்தரமான சான்றளிக்கப்பட்ட நாற்றுகளுக்கான தேவை திணைக்களத்தின் நாற்று மேடைகள் 12 மற்றும் 661 தனியார் நாற்று மேடைகள் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. 2024 ஆம் ஆண்டில், கஸ்னாவா நாற்று மேடையில் நீர் வழங்கல் அமைப்புகளை நிறுவும் பணி நிறைவடைந்தது, மேலும் மித்தேனியா நாற்று மேடைக்கு தேவையான தாவரக் கொட்டகை தயாரிக்கப்பட்டது. மேலும், பண்ணைகளுக்கு அவசியமான 161 பண்ணை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அத்துடன் தாவர உற்பத்திக்குத் தேவையான பாக்கு,சாதிக்காய் மற்றும் கோப்பி விதைகள் கொள்வனவு செய்யப்பட்டன. இதன் கீழ், தாவர உற்பத்திக்குத் தேவையான 900,000 பொலித்தீன் பைகள் மற்றும்

275 வளர்ப்பு ஊடகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. மத்திய நாற்று மேடைகளின் அபிவிருத்திக்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 12.50 மில்லியனில் நிதி இலக்கில் இருந்து ரூபா 8.168 மில்லியன் செலவிடப்பட்டது.இது மொத்த முன்னேற்றத்தில் 65% ஆகும்.

- ஏற்றுமதி பயிர் உற்பத்தித்திறன் ஊக்குவிப்புத் திட்டம் 2024 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. இதன் கீழ்,சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தற்போதுள்ள பயிர்ச் செய்கைகளின் உற்பத்தி திறனை மேம்படுத்துவதன் பொருட்டு காலி இடங்களுக்கான நாற்றுக்களை பெற்றக் கொடுத்தல்,ஏற்றுமதி பயிர்களை சேதப்படுத்தும் பூச்சிகள் மற்றும் விலங்குகளது பாதிப்புக்களில் இருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன் சாதனங்கள் மற்றும் அமைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. ஒட்டுமொத்த திட்டத்திற்கு 2024 ஆம் ஆண்டில் ரூபா 47.72 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதில் ரூபா 16.436 செலவிடப்பட்டது. இது மொத்த முன்னேற்றத்தில் 34.4% ஆகும்.

  காலி இடங்களில நாற்றுக்கள் நடுவதன் கீழ் இலக்காகக கொண்ட 6,082 ஹெக்டேயர் பயிர்ச் செய்கை நிலப் பரப்பளவில் 4,105.91 ஹெக்டேயரில் மிளகு,கொக்கோ, கிராம்பு,கோப்பி மற்றும் சாதிக்காய் போன்ற ஏற்றுமதி விவசாய பயிர் நாற்றுகள் வழங்கப்பட்டன. பூச்சிகள் மற்றும் விலங்கு சேதத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்ட பூச்சிக் கட்டுப்பாட்டு அலகு விநியோகத் திட்டத்தின் கீழ், இலக்கு வைக்கப்பட்ட 32 அலகுகளில் 13 அலகுகள் பொருட்டு விநியோகிக்கப்பட்டன. இலக்கு வைக்கப்பட்ட 35 அலகு சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் விநியோக அமைப்புகளில்,18 அலகுகளை நிறுவுவதற்கான செலவில் 50% முதலீட்டு உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், மிளகு வாடல் நோய் மற்றும் சாதிக்காய் இலை உதிர்தல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

- பயிர் மதிப்புச் சங்கிலி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கான சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) சான்றழிக்கும் வேலைத் திட்டம், மதிப்புச் சங்கிலி மேம்பாடு, வர்த்தக மேம்பாடு, தரச் சான்றிதழ், பங்குதாரர் விழிப்புணர்வு மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இந்த மொத்த திட்டத்திற்கும் நிதி இலக்காகக் கொண்ட ரூபா 43.80 மில்லியன் ஒதுக்கப்பட்டது, அதில் 2024 ஆம் ஆண்டில் இதன் பொருட்டு ரூபா 42.156 மில்லியன் செலவிடப்பட்டது. இது ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் 96.2% ஆகும். சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) சான்றிதழ் திட்டத்தின் கீழ் சான்றிதழ்களைப் பெற சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில்,03 GAP சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, மேலும் 03 திட்டங்கள் அதன் கீழ் நடத்தப்பட்டன.

- ஏற்றுமதி விவசாயப் பொருட்களின் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப செயல்முறையை நெறிப்படுத்துவதன் மூலம்,உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துதல்,பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை ஊக்குவித்தல் மற்றும் முதலீட்டு உதவி வழங்கும் செயல்முறையை நெறிப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத் திட்டம் 2024 இல் செயல்படுத்தப்பட்டது. அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப முதலீட்டு உதவித் திட்டத்தின் கீழ்,2024 ஆம் ஆண்டில் 144 அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப உபகரணங்களுக்கு உதவி வழங்கப்பட்டது, மேலும் 02 அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப செயலாக்க மையங்களை நிறுவுவதற்கு முதலீட்டு உதவி வழங்கப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட ஏற்றுமதி விவசாய பயிர் பொருட்களின் தரத்தை உறுதி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட தரச் சான்றிதழ் திட்டத்தின் கீழ் இரண்டு சான்றிதழ்கள் மற்றும் இரண்டு விழிப்புணர்வு திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. பங்குதாரர் பதிவு திட்டத்தின் கீழ் 745 பேர் பதிவு செய்யப்பட்டனர்.

- 2024 ஆம் ஆண்டில் தொடர்பாடல் திட்டங்கள் தொடர்ச்சியாக செயல்படுத்தப்பட்டன, இதற்காக ரூபா 20.00 மில்லியன் ஒதுக்கப்பட்டது, அதில் தகவல் தொடர்பு திட்டங்களுக்காக ரூபா 20.51 மில்லியன் செலவிடப்பட்டது. இதன் கீழ், ஏற்றுமதி விவசாய பயிர்கள் பற்றிய தகவல்கள் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், அச்சு ஊடகங்கள், தகவல் மையங்கள்,1920 விவசாய சேவை தகவல், வலைத்தளங்கள், பேஸ்புக், யூடியூப், டெலிகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற சமூக ஊடக வலையமைப்புகள் மூலம் பங்குதாரர்களிடையே தொடர்பாடப்பட்டது. தொலைக்காட்சி நிகழ்ச்சியாக 24 ‘‘செங்கவுனு கஹுவனு’’ நிகழ்ச்சிகளும்,27 ரண்மசு உயன நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பு செய்யப்பட்டன. அத்துடன் வானொலியில் 52 ‘‘ரச ஜனனி’’ நிகழ்ச்சிகள்,43 ‘‘ரச மஞ்சள’’ நிகழ்ச்சிகள்,16 ‘‘ஹரித மஞ்சள’’ நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை ஒளிபரப்பப்பட்டன. ஏற்றுமதி விவசாய பயிர்களின் சந்தை விலைகளை பங்குதாரர்களுக்கு வழங்குவதற்காக தினமின செய்தித்தாளில் 45 விலை தகவல் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. ஏற்றுமதி விவசாயம் தொடர்பான தொழில்நுட்பத் தகவல்களைக் கொண்ட 500 ஏற்றுமதி விவசாயப் பயிர் தொடர்பான பிரசுரங்கள் அச்சிடப்பட்டன, ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான விளம்பர நடவடிக்கைகளுக்காக 22 பதாகைகள் மற்றும் 175 ஏனைய அச்சிட்டுகள் செய்யப்பட்டன.

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தகவல் மையம் வாயிலாக ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் பற்றிய தகவல்களை நேரடியாக வருகை தந்த 541

பேருக்கு வழங்கியது அத்துடன் 1,178 பேருக்கு தொலைபேசி வாயிலாக தகவல்களை வழங்கியது. 1920 விவசாய ஆலோசனை சேவையின் கீழ், ஏற்றுமதி பயிர்கள் குறித்த தொழில்நுட்ப தகவல்கள் தேவைப்படும் 1402 பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி விவசாய பயிர்கள் பற்றிய தகவல்கள் திணைக்கள வலைத்தளம் மூலம் பெறப்பட்டுள்ளன, மேலும் 550,616 பேர் வலைத்தளத்தை அணுகி ஏற்றுமதி பயிர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுள்ளனர். மேலும்,1,525 பேர் facebook வாயிலாக ஏற்றுமதி பயிர் தொடர்பான தகவல்களை பெற்றுள்ளனர். அத்துடன் நேரடி நிகழ்ச்சிகள் 21 உம், ஏற்றுமதி பயிர் தகவல்களுக்கு 1,696 பேர் பதில்கள் வழங்கி உள்ளனர். You Tube Channel வாயிலாக ஏற்றுமதி விவசாய பயிர்கள் பற்றிய தொழில்நுட்ப தகவல்கள் உட்பட109 காணொளிகள்,27 நேரடி நிகழ்ச்சிகள் மற்றும் அது தொடர்பாக 129 பதில்கள்அவர்களுக்கு வழங்கப்பட்டன. ஏற்றுமதி விவசாய பயிர் தொழில்நுட்பங்கள் மற்றும் சிக்கல்கள் குறித்த பதில்கள் முறையே 911 மற்றும் 12,512 பேருக்கு டெலிகிராம் மற்றும் வாட்ஸ்அப் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டில் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் குறித்த 08 கண்காட்சிகள் நடத்தப்பட்டு, பங்குதாரர்களுக்குஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பாக தொழில்நுட்ப அறிவு பெற்றுக் கொடுக்கப்பட்டது. திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் பயிற்சி, கள நாட்கள், மாத்தளை சேவைப் பயிற்சி மையத்தில் பயிற்சித் திட்டங்கள்,கறுவா தொடர்பான பயிற்சித் திட்டங்கள் மற்றும் நிகழ்நிலையில் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

- 2024 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்,ரூபா 8.00 மில்லியன் ஒதுக்கப்பட்டது, அதில் ரூபா4.88 மில்லியன் செலவிடப்பட்டது, இது மொத்த நிதி முன்னேற்றத்தில் 61% ஆகும். இதன் கீழ்,17 மாவட்டங்களில் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பாக 1730 விவசாய பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. 56,161 பயனாளிகள் பொருட்டு 234 கள நாள் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இது ஏற்றுமதி விவசாய பயிர்கள் பற்றிய தொழில்நுட்ப அறிவையும் நடைமுறை அறிவையும் வழங்கியது.

ஏற்றுமதி விவசாய சேவைகள் பயிற்சி நிலையத்தின் ஊடாக ஏற்றுமதி விவசாய துறையில் உள்ள பங்குதாரர்கள் மற்றும் அதிகாரிகளின் அறிவு, மனப்பான்மை மற்றும் திறமை என்பவற்றில் பரிபூரன நபர்களாக மாற்றுவதற்காக,2024 ஆம் ஆண்டில் பல பயிற்சி பட்டறைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மற்றும் நிகழ்நிலை பயிற்சித் திட்டங்கள் போன்றன வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. தேவைக்கேற்ப திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

குண்டசாலை, கரபிஞ்சா, போன்ற விவசாயக் கல்லூரிகள், தேசிய பெருந்தோட்ட முகாமை நிறுவனம், எக்வைனாஸ் நிறுவனம், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்றன 2024 ஆம் ஆண்டு சிறப்பு நடைமுறை பயிற்சி அமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன மாத்தளை சேவை பதிப்பு பயிற்சி மையத்தில் நடத்தப்பட்டன.

அவ்வாறே இந்த நிறுவனம் ஊடாக உயர் வரவேற்பின் கீழ் நிகழ்நிலையில் பயிற்சி வேலைத்திட்டங்கள் 02 மிகவும் சிறந்த முறையில் zoomதொழில்நுட்பத்தின் மூலம் நடாத்தியதுடன் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ முகநூல் பக்கம் மற்றும் யூடியூப் சேனல்கள் மூலம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. ஏற்றுமதி விவசாய பயிர்களின் சாகுபடி, பராமரிப்பு மற்றும் நோய் கட்டுப்பாடு தொடர்பான தொழில்நுட்ப அம்சங்களை உள்ளடக்கிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

- 2024 ஆம் ஆண்டில் 3,516,725 கறுவாச் செடிகளை கொள்வனவு செய்வதற்கா ரூபா 85.2731 செலவிடப்பட்டதோடு இதன் கீழ458.53 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது.

உலகின் முக்கிய மிளகு உற்பத்தி செய்யும் நாடுகள் 1972 ஆம் ஆண்டு ஒன்றிணைந்து, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் கீழ், சர்வதேச மிளகு சமூகம் என்ற அமைப்பை உருவாக்கின. அதன் முக்கிய மற்றும் நிரந்தர உறுப்பு நாடுகள் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகும். சர்வதேச மிளகு சமூகத்தின் தலைமைப் பொறுப்பு ஆண்டுதோறும் நிரந்தர உறுப்பினர் நாடுகளில் ஒன்றால் நடத்தப்படுகிறது, மேலும் ஆண்டின் ஒவ்வொரு முக்கியமான செயல்பாடும் அந்தத் தலைவரின் செயல்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி,2024 ஆம் ஆண்டு இலங்கைக்கு அதன் தலைமைப் பதவி வழங்கப்பட்டது, மேலும் சர்வதேச மிளகு மாநாடு 2024 நவம்பர் 18 முதல் 21 வரை கொழும்பில் உள்ள ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. சர்வதேச மாநாட்டுடன் இணைந்து ஒரு கண்காட்சி மற்றும் களப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டன, மேலும் சுமார் 150 உள்ளூர் மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்வில், மிளகு உற்பத்தி தொடர்பான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஆராய்ச்சி முடிவுகள் உறுப்பு நாடுகளிடையே பரிமாறப்பட்டன.

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் நக்கிள்ஸ் மலைகளில் காலநிலை மீள்தன்மையை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு உலகளாவிய காலநிலை நிதியத்தால் Global Climatic Fund (GCF) நிதியளிக்கப்படுகின்றது. காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களைக் குறைக்க நிலையான நில முகாமையை மேம்படுத்துதல், சீரழிந்த நிலப்பரப்புகளை மீட்டெடுப்பதையும மற்றும் நீர்வள

மேலாண்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுGCF நக்கிள்ஸ் திட்டம் 2024 ஆம் ஆண்டு கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் வாழ்வாதார விவசாய மற்றும் தோட்ட சமூகங்களின் வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல், வறட்சி மற்றும் வண்டல் படிவதைத் தடுக்க மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மற்றும் காடுகளில் வனப்பகுதியை வலுப்படுத்துதல், நிலச் சீரழிவைக் குறைத்தல், பகுதி சார்ந்த சுற்றுலா, விவசாயம் மற்றும் சேவைகளுக்கான புதுமையான சிறந்த முகாமை நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப அணுகுமுறைகளை உருவாக்குதல், புதுமையான சூழல் நட்பு வேலைகள், நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்காக இளைஞர்கள் மற்றும் சமூகங்களை உயிர்ப்பித்தல் மற்றும் காலநிலை தழுவலை எளிதாக்க உலகளாவிய மற்றும் பாரம்பரிய அறிவுடன் அவர்களைச் சித்தப்படுத்துவதற்கு பல தொழில்நுட்ப அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒரு புதிய பயிர்ச் செய்கைத் திட்டம், உற்பத்தித்திறன் ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் வீட்டுத் தோட்டத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன, இதற்காக ரூ. 12.199 செலவிடப்பட்டது.

உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆராய்ச்சி திட்டங்களை செயல்படுத்துவதில் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவு பங்களித்துள்ளது. அதன்படி, சுற்றுச்சூழல், சமூக, பொருளாதார மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் கருத்தில் கொண்டு, விவசாய பயிர் உற்பத்திகளின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், மரபணுப் பொருட்களைப் பாதுகாக்கும் வெலைத்திட்டங்கள்,ஏற்றுமதி விவசாய பயிர்களுக்கான புதிய நடுகைப் பொருட்கள், புதிய பயிர் உச்கை முகாமை முறைகள் மற்றும் இயற்கை வள முகாமை உத்திகள், பயிர் பாதுகாப்பு முறைகள் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள் ஆகியவற்றிற்காக ஆராய்ச்சிப் பிரிவால் நடத்தப்பட்ட பல்வேறு ஆராய்ச்சிகளில் 2024 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட சில ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- உள்ளூர் மிளகற்கான இடத்தினை மதிப்பீடு செய்வதற்காக, ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் விரிவாக்க ஊழியர்களுடன் இணைந்து,அறுவடை திறன், நிலைத்தன்மை, கிளை நீளம், காய் அடர்த்தி மற்றும் பழத்தின் அளவு போன்ற தாவர பண்புகளைக் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட தாய் தாவரங்களை கவனமாகத் தேர்ந்தெடுப்பது மேற்கொள்ளப்பட்டது, மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாய் தாவரங்கள் ஏற்றுமதி பயிர் ஆராய்ச்சி நிலையத்தில் கட்டுப்படுத்தப்பட்ட நாற்றங்கால் நிலைமைகளின் கீழ் இனப்பெருக்கம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டன.

- புதர் மிளகு செய்கையிக்கு அடையாளம் காணப்பட்ட சிறந்த உர பரிந்துரையானது 03 மாத இடைவெளியில் ஒரு தொட்டியில் (10 லிட்டர் அளவு) 2.5 கிராம் யூரியா, 25 கிராம் ERP மற்றும் 2.5 கிராம் MOP ஆகியவற்றைப் பிரயோகிப்பதாகும். மாற்றாக,3 மாத

இடைவெளியில் ஒரு தொட்டியில் (10 லிட்டர்) NPK 15-15-15 (K மூலத்தை SOP ஆக) கூட்டு உரம் அல்லது NPK12-11-18 (K மூலத்தை SOP ஆக) கூட்டு உரத்தை 1 கிராம் சேர்ப்பதன் மூலம் புதர் மிளகின் வளர்ச்சியையும் விளைச்சலையும் அதிகரிக்கலாம் என்று கண்டறியப்பட்டது.

- தாழ்நில ஈர மண்டலத்தில் உள்ள நாற்று மேடைகளின் 1 வருடம் வரை வளர்க்கப்படும் மிளகு செடிகளின் வளர்ச்சி பண்புகளை ஒப்பிட்டுப் பார்த்த ஆய்வில், தேர்ந்தெடுக்கப்பட்ட மிளகுத் தேர்வுகள் மற்றும் வகைகளில் பணியூர் மிளகு செடிகள் மிக உயர்ந்த வளர்ச்சி பண்புகள் மற்றும் உயிர்வாழ்வைக் காட்டின என்பது தெரியவந்தது.

- கோப்பிமரபணுக்களை விவரிப்பதில் கவனம் செலுத்தி, மிகவும் பிரபலமான அராபிகா கோப்பி வகைகளான லக் பராகும்,S9 HDT மற்றும் கேட்டிமோர் ஆகியவற்றை உருவவியல் முறையில் விவரிக்க முடிந்தது.

- ரோபஸ்டா கோப்பி விதைகள் முளைப்பதற்கு எடுக்கும் நேரத்தைக் குறைப்பதற்கான சிறந்த வழியாகுவது நடுகை செய்வதற்கு முன் கோப்பி விதையிலிருந்து காகிதத்தோல் அடுக்கை அகற்றுவது மற்றும் அதற்கும் மேல் விதைகளை 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைப்பதும் ஆகும்.

- நாற்று மேடைகளில் கோப்பி செடிகள் அதிகமாக வளரும்(Overgrown)பிரச்சினையைத் தவிர்க்கும் பொருட்டு அவற்றின் தண்டு மற்றும் வேர்களை கத்தரித்த பிறகு கன்றுகளை 10x12"அளவு கொண்ட தொட்டிகளில் மீண்டும் நடவு செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. அப்போது தரை மட்டத்திலிருந்து 20 செ.மீ உயரத்தில் மரத்தின் அடிப்பகுதியை வெட்டி நீக்க வெண்டியதுடன் பழைய தொட்டியின் (8x5')அடிப்பகுதியில் இருந்து வேர் அமைப்பின் பாதியை அகற்ற வேண்டும். பின்னர்,களத்தில் நடுவதற்கு முன்பு, செடியை 04 மாதங்களுக்கு நாற்று மேடை வளாகத்தில் கவனமாக பராமரிக்க வேண்டும்.

- கோப்பி நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு லக் பராகும் மற்றும் S9அராபிகா காபியின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை கிளைகளிலிருந்து தண்டு துண்டுகளைப் பயன்படுத்துவது மிகவும் வெற்றிகரமாக இருந்தது. இருப்பினும், இரண்டாம் நிலை கிளைகளைப் பயன்படுத்துவது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. அந்த முதன்மை அல்லது இரண்டாம் நிலை தண்டு துண்டுகளில் 95% முழு கோப்பி நாற்றின் முக்கிய வேராக வளர்ந்தன.

- காபி பழுப்பு கண் புள்ளி நோயை ஏற்படுத்தும் செர்கோஸ்போரா கா.ஃபிகோலா (Cercosporacoffeicola) என்ற பூஞ்சைக்கு எதிராக தேர்ந்தெடுக்கப்பட்ட தாவரவியல் சாற்றின் உயிர்-செயல்திறனை தொடர்பாக மதிப்பீடு செய்ததில், ஆய்வக நிலைமைகளின் கீழ் நோய்க்கிருமியான செர்கோஸ்போரா கா.ஃபிகோலாவுக்கு மாற்று கட்டுப்பாட்டு முறையாக தாவரவியல் சாற்றைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சோதனை பூஞ்சையின் உட்புற வளர்ச்சியைத் தடுப்பதில் கறுவா செலானிகம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது நிரூபிக்கப்பட்டது.

- கிராம்பு நாற்றுகளின் நாற்றங்கால் காலத்தை மேம்படுத்த, பரிந்துரைக்கப்பட்ட பாத்திர கலவையால் நிரப்பப்பட்ட 10x12”தொட்டிகளில் (நன்கு அழுகிய உரம், மணல், மேல் மண் மற்றும் தென்னை நார் 1:1:1:1 என்ற விகிதத்தில்) ஆல்பர்ட் கரைசல், கூட்டு உரம் NPK15-15-1- (K இனத்தின் SOP ஆக உள்ள) டை அம்மோனியம் பாஸ்பேட் மற்றும் யூரியா, டிரிபிள் சூப்பர் பாஸ்பேட் கலவைகள் போன்ற பல்வேறு உரங்கள் பயன்படுத்தப்பட்டன. சோதனை நிலைமைகளின் கீழ் சிகிச்சையளிக்கப்பட்ட அனைத்து கிராம்பு நாற்றுகளும் நன்றாக வளர்ந்தன மற்றும் 6 மாத சிகிச்சைக்குப் பிறகு வயலில் நிறுவ முடிந்தது.

  கண்டி மாவட்டத்தில் சாதிக்காய் பரவலாக பயிரிடப்படும் பகுதிகளில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் போது அவதானிக்கப்படட கள நிலங்களில் உள்ள பெரும்பாலான சாதிக்காய் மரங்கள் வீட்டுத் தோட்டங்களாக இருந்தன என்பது தெரியவந்தது. மேலும், பல தாவரங்களின் காய்க்கும் நிலையில் உற்பத்தித்திறன், தாவரங்களுக்கு இடையே போதுமான இடைவெளி இல்லாதது, ஒன்றுடன் ஒன்று இணைந்த தாவர விதானங்கள் மற்றும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. ஆய்வு செய்யப்பட்ட கள நிலங்களில் மண்ணின் pHபெறுமானம் சாதிக்காய்க்கு சாதகமாக இருந்தது, மேலும் மண்ணில் அதிக அளவு பரிமாற்றக்கூடிய பொட்டாசியம் மற்றும் கார்பன் இருந்தது. இருப்பினும், மண்ணில் கிடைக்கும் பொசுபரஸ் மிகவும் குறைவாக உள்ளது.

- சாதிக்காய் திசு வளர்ப்பு பரவலின் ஆரம்ப கட்டங்களின் பொருட்டு ஆய்வக முறை உருவாக்கப்பட்டது.

- இஞ்சியின் இலைப்புள்ளி நோயான ஃபிலோஸ்டிக்டேசிங்பெரி *Phyllostictazingiberi* என்ற பூஞ்சையால் ஏற்படுகிறது, இதை 50% தாவரச் சாறுடன் லந்தானா காமரா,(Lantana, camara) துளசி *(Ocimumtenuiflorum)*மற்றும் காட்டு சூரியகாந்தி ( *Tithonia diversifolia*) ஆகியவற்றை இலைகளில் தெளிப்பதன் மூலம் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தலாம்.

- இலங்கையில் பொதுவாக வளர்க்கப்படும் வெண்ணிலா பிளானி∴போலியா *Vanilla Planifolia* உட்பட நான்கு அங்கீகரிக்கப்பட்ட வெண்ணிலா இனங்கள் இருப்பதாக ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. வி.வைட்டி, வி.மூனி மற்றும் வி.வால்காரி (*V.wightti, V.mooni* සහ *V.walkari)* போன்ற பிற இனங்கள் தீவின் இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில் வி. வைட்டி *V.wightti*காணப்படவில்லை. அது சுற்றுச்சூழல் மாற்றங்கள், வாழ்விட இழப்பு அல்லது வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சி காரணமாக இருக்கலாம். மூன்று இனங்களின் மாதிரிகளைச் சேகரித்து,மேலதிக விபரங்களை கணடறிவதற்காக தொடர்ந்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- வெவ்வேறு பாத்திரப் பொருட்களின் கலவையைப் பயன்படுத்தி வெற்றிலைப் பரப்புதலுக்கு குறைந்த விலை பாத்திர கலவைகளாக மேல் மண்: மாட்டுச் சாணம்: மண்: தென்னை நார்: பகுதியளவு எரிந்த அரிசி தவிடு 2:1:1:1:3 எனும் விகிதத்தில் மற்றும் மேல் மண்: மாட்டுச் சாணம்: பகுதியளவு எரிந்த அரிசி தவிடு 1:1:3 எனும் விகித்தில் பரிந்துரைக்கலாம் என்பது தெரியவந்தது.

- கென்யாவின் நைரோபியில் உள்ள சர்வதேச விவசாய வனவியல் ஆராய்ச்சி நிலையத்தில் (ICRAF), மண் நிறமாலை பகுப்பாய்வு அலகாக அத்தியாவசிய உபகரணங்களுடன் கூடிய ALPHA II FT-IR நிறமாலை மீட்டரை நிறுவியது. பசுமை காலநிலை நிதியத்தால் நிதியளிக்கப்பட்ட இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய நதிப் படுகைகள், நீர்நிலைகள் மற்றும் கீழ் நக்கிள்ஸ் மலைத்தொடர் நீர்நிலைகளில் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாய சமூகங்களின் “காலநிலை தாங்குதிறனை வலுப்படுத்துதல்” என்ற திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதற்காக வழங்கப்பட்ட இந்த உபகரணங்கள், திட்டம் வெற்றிகரமாக முடிந்ததும் திணைக்களத்திற்கு மாற்றம் செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனத்துடன் தொடர்புடைய புதிய தொழில்நுட்பம் குறித்து அரசுத் துறைகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த பல்வேறு தரப்பினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

- நாரம்மலாவில் புதிய ஆய்வக வளாகத்தின் தரைத்தள கட்டுமானத்தின் IV கட்டம் 2024 ஆம் ஆண்டில் முடிவுறுத்த முடியுமாக இருந்தமை திணைக்களத்தின் ஒரு சாதனையாகக் குறிப்பிட முடியும்.

- இலங்கையில் சாதிக்காய் (Myristica fragans Houtt) மரபனு பிளாஸ்மத்தின் உருவவியல்,உயிரியல் இரசாயனம் மற்றும் மூலக்கூறு பண்புக்கூறுகள் குறித்த ஆராய்ச்சி பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்டது, இதன் விளைவாக எதிர்கால பயிர் மேம்பாட்டுத் வேலைத் திட்டங்களில் பயன்படுத்துவதன்

பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சாதிக்காய் மரபனு பிளாஸ்மத்தின் கள அடிப்படையிலான மரபணு வங்கி நிறுவப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டில், இலங்கையின் பல்வேறு பொது மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 34 இளங்கலை மாணவர்கள், அதாவது மாத்தளை ஏற்றுமதி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் 26 பேர், நாரம்மல, வெற்றிலை மற்றும் ஊடுபயிர் ஆராய்ச்சி மையத்தில் 07 பேர் மற்றும் வால்பிட்டா திசு வளர்ப்பு ஆராய்ச்சி மையத்தில் ஒருவர என்ற அடிப்படையில் தங்கள் ஆராய்ச்சி கூறுகளை மடிவுறுத்துவதற்கும் மற்றும் தொடர்புடைய பாடங்களில் கள மற்றும் ஆய்வக அனுபவத்தைப் பெறுவதற்குமான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொண்டுள்ளனர்.˙

## ஆய்வு வெளியீடுகள்

1. பண்டாரா, டபிள்யூ.ஜி.எஸ்.வி.டி.இ. வீரவர்தன மற்றும் எச்.ஏ.டபிள்யூ.எஸ். குணதிலகா (2024) தொட்டிகளில் வளர்க்கப்படும் புதர் மிளகு செடிகளின் வளர்ச்சியில் அடிப்படை மற்றும் கூட்டு உரங்களின் விளைவு.,22வது விவசாய ஆராய்ச்சி மாநாட்டின் நடவடிக்கைகள் (2024),விவசாய மற்றும் தோட்ட முகாமை பீடம், இலங்கை வயம்பா பல்கலைக்கழகம், பக். 590- 594

2. தர்மகீர்த்தி, எச்.எஸ்.டி.இ.வீரவர்தன மற்றும் ஜி.இ.எம்.விமலசிறி (2024) மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களில் கிராம்பு செய்கையில் மண் வளம் மற்றும் மைக்கோரைசா தொற்று பற்றிய ஆய்வு (2024). 5 ஆவது சர்வதேச விவசாய விஞ்ஞான மாநாடு, சப்ரகமுவ பல்கலைக்கழகம், இலங்கை,28

3. திசாநாயக்க, டி.எம்.பி.வி. (2024) திறனான வெற்றிலை (பைபர் வண்டு) இனப்பெருக்கத்திற்கான செலவு குறைந்த மற்றும் குறைந்த பாத்திர ஊடகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த 4வது சர்வதேச மாநாடு (ICST). இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

4. திசாநாயக்க, டி.எம்.பி.வி. (2024) வெற்றிலை வளர்ச்சி மற்றும் அறுவடைக்கான மாற்று பொட்டாசியம் மூலமாக பகுதியளவு வறுத்த அரிசி தவிடு பயன்படுத்துதல்,8வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், இலங்கை.

5. திசாநாயக்க, எச்.எம்.எஸ்.வை, டி.ஜி.எச்.எம்.கே. திசாநாயக்க மற்றும் எச்.ஏ.டபிள்யூ.எஸ். குணதிலகா, (2024). அரபிகா காபி வகைகளான லக் பராகும்,S9, HDT மற்றும் கேட்டிமோர் இனம் ஆகியவற்றின் வளர்ச்சி மற்றும் இனப்பெருக்க நிலைகளின் பல்வேறு பண்புகள்

https:www.researchgate.net/publication/388069160_Varietal_Characterization_of_Arabica_cofee_coffra_arabica_L_Varities_Lakperakum_S9_ HDT_ and Catimor_in_the Vegetative and Reproductive Phase.

6. இந்துருவ விதான ஆராச்சிகே டொன், சி.எஸ்.ஜ. பிட்டனிட்,W. மற்றும் Lorjaroenfon.Y.2024. தெளிப்பு அல்லது உறையவைத்து உலர்த்தும் நுட்பங்களின் தரத்தை தீர்மானித்தல் மற்றும் மிளகு நல்லெண்ணெய் உறைதல். உலர்த்தும் தொழில்நுட்பம் 42(6),1098-1115

7. முதியன்சேலாகே நிலன் சுதத் தயாரத்ன, ஹர்‘ மனோஜ் குமார திஸாநாயக்க, அருணி வீரசிங்க, எரண்டி மதுசிகா குமாரி ரந்தெனிய, (2024) மஞ்சளில் (Curcuma longa L.) உள்ள திசு வளர்ப்பு பாலிப்ளோயிட்களை உற்பத்தி செய்வதில் கொல்கிசின் Colchicine தாக்கம் பற்றிய ஆய்வு விவசாய ஆய்வு தொடர்பான சர்வதேச மாநாடு (IJAAR)..http:// www.inspub.net

8. முனசிங்க, எம்.எஸ்.எஸ்., ஹேரத், எம்.கே. ஹர்னி, கே (2024) பல்வேறு விதை சிகிச்சைகள் மூலம் ரோபஸ்டா கோப்பியின் (கா.ஃபியா கேனி.ஃபோரா) விதை முளைப்பு செயல்திறனை மதிப்பீடு செய்தல், ஐசிஐஇடி 2024, ஸ்ரீ ஜெயவர்தனபுரா பல்கலைக்கழகம்.

9. முனாசிங்க,எம்.எஸ்.எஸ்., நஸ்ரா, எம்.என்.எஃப், சத்தரசிங்க டி.(2024) இலங்கையில் உள்ள நர்சரிகளில் வெண்ணிலா தாவர உற்பத்தியில் தண்டு தொங்கும் காலம் மற்றும் வெண்ணிலா காய்களின் எண்ணிக்கையின் விளைவை மதிப்பீடு செய்தல், தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டு ஆராய்ச்சி நுழைவாயில் (2024), பொது நிர்வாக அமைச்சகம்.

10. நிரஷான் எம்.ஏ.ஏ., டி.ஜி.எச்.எம்.கே. திசாநாயக்க, என்.எம்.சி. நயனகாந்த மற்றும் ஆர்.எம்.இ.எம். ரந்தேனியா. (2024) மஞ்சள் (Curcuma lomga L) கால்சஸ் உற்பத்திக்கான திசு வளர்ப்பு முறையை அடையாளம் காணுதல். https://www.researchgate.net/ publication/382553425 Identification of high throughput in vitro culture protocol for turmeric Curcuma longa L callus production.

11. நுவரவெவ,S.W.N.W.C.S., T.E. வீரவர்தன மற்றும் எச்.ஏ.டபிள்யூ.எஸ்.குணதிலகா, (2024). பல்வேறு உர சேர்க்கைகளைப் பயன்படுத்தி கிராம்பு (Syzygium aromaticum L) நாற்றுகளின் நாற்றங்கால் காலத்தை மேம்படுத்துதல். 22வது விவசாய ஆராய்ச்சி மாநாட்டில் (2024), இலங்கை வயம்பா பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்ட முகாமை பீடம், பக்கங்கள் 660-664.

12. பிரேமரத்ன, எம்.ஜி.டி.எஸ்.டி.இ. வீரவர்தன மற்றும் எச்.ஏ.டபிள்யூ.எஸ். குணதிலகா, (2024). கண்டி மாவட்டத்தில் சாதிக்காய் தோட்டங்களில் மண் வளம் மற்றும் ஊட்டச்சத்து முகாமை நடைமுறைகள் தொடர்பாக கள ஆய்வுகள். 22 ஆவது விவசாய ஆராய்ச்சி மாநாட்டில் (2024), இலங்கை வயம்பா பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் தோட்ட முகாமை பீடம், பக்கங்கள் 680-684.

13. ரணசிங்க எச்.என்.எம்,, டபிள்யூ.எம்.ஆர்.டபிள்யூ.பி. விஜேகோன், என்.எம்.சி. நயனகாந்த மற்றும் கே.ஏ.ஆர்.டி. கொடிக்கம்பம், (2024). செர்கோஸ்போரா கா.ஃ.பிகோலாவால் Cercosporacoffeicola ஏற்படும் காபியின் பழுப்பு நிற கண் புள்ளி நோய்க்கு எதிராக தேர்ந்தெடுக்கப்பட்ட தாவரவியல் சாற்றின் உயிரியல்-செயல்திறனின் இன் விட்ரோ மதிப்பீடு. இலங்கையின் பதுளையில் உள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் 8வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு. பக்கம் .118

14. ரூபசிங்க, பி.ஏ.எச்.ஐ.கே.டி.என். பிரியதர்ஷனி, மற்றும் எல்.என். வீரசிங்க (2024). வெண்ணிலாவின் (வெண்ணிலா பிளானி.ஃ.போலியா) உள் மொட்டு பெருக்கத்திற்கான கிருமி நீக்கம் செயல்முறைகளின் செயல்திறனை ஒப்பிட்டுப் பார்த்தல்,SLCSS மற்றும் பப்ளிக் விளம்பர அமைச்சகம் இணைந்து ஏற்பாடு செய்த ஆராய்ச்சி கருத்தரங்கு, பக்கம். 42.

15. ரூபசிங்க, பி.ஏ.எச்.ஐ.கே.டி.என். பிரியதர்ஷனி, மற்றும் எல்.என். வீரசிங்க (2024). மிளகுக்கான மாற்று பத்திரக் கலவைகளின் மதிப்பீடு புதுமை மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த சர்வதேச மாநாடு,44 பக்கங்கள்.

16. சஹ்லா, எம்.ஜே.எ.ஃ.ப், டி.ஜி.எச்.எம்.கே. திஸாநாயக்க, இந்திக கமனி ஹேவாவிதாரண, மற்றும் ரி.எம்.இ.எம்.கே. ரந்தேனியா. (2024) அதிக கால்சஸ் உற்பத்தியை இலக்காகக் கொண்ட வெண்ணிலாவிற்கான (வெண்ணிலா பிளானி.ஃ.போலியா ஆண்ட்ரூஸ்) கால்சஸ் சாகுபடி நெறிமுறைகளை மேம்படுத்துதல்.
https://www.researchgate.net/pub (திருத்தப்பட்டது)

17. சமரக்கோன், எஸ்.எம்.ஐ.எம். விஜேகோன், டபிள்யூ.எம்.ஆர்.டபிள்யூ.பி. குமாரி, பி.டி.எஸ். யு.முத்துரான்வெலிகே, டி.டி. மற்றும் கொடித்துவக்கு, ஆர்.டி. (2024). வெண்ணிலா பிளானி.ஃ.போலியாவின் வேர் அழுகல் மற்றும் தண்டு அழுகல் நோய்களுக்கு காரணமான உயிரினங்களை அடையாளம் கண்டு நிர்வகிப்பது குறித்த ஆய்வு. இலங்கையின் பதுளையில் உள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 08வது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு. பி.142.

18. சில்வா, எஸ்.ஜ.சி. தர்மபராக்கிரம, ஏ.எல்.எஸ்., முனசிங்க, எஸ்.எஸ்.'மகா, டபிள்யூ. ஏ.எச்., சாந்த கே.பி.ஜி., அமரகோன், எஸ், மல்காந்தி, எம்.எம்.எஸ்., (2024), இலங்கையின் தாழ்நில இடைநிலை வலயத்தில் பயிர் செய்கை செய்வதற்கான உள்நாட்டு இஞ்சியின் மதிப்பீடு. புதுமை மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த 2024 சர்வதேச மாநாட்டின் நடவடிக்கைகள். ப.46. நவம்பர் 21-22,2024 அன்று நடைபெற்றது. ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது, மஹேனவத்த, பிடிபன வடக்கு, ஹோமாகம,10206, இலங்கை.

19. சில்வா, எஸ்.ஜ.சி., முனசிங்க, எம்.எஸ்.எஸ். சாந்தா, கே.ஜி.பி. ஷாமகா, டபிள்யூ.ஏ.ஏ.எச்., (2024), இலங்கையின் தாழ்நில இடைநிலை மண்டலத்தில் தென்னை செய்கையின் கீழ் ஊடுபயிர்களாக வளர்க்கப்படும் சீன மற்றும் ரங்கூன் இஞ்சியின் உருவவியல் பண்புகள் மற்றும் மகசூல் மதிப்பீடு. நான்காவது சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாநாடு (ICST 2024), இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ப.24

20. விஜயரத்ன, ஜே., இந்துருவ, எஸ்., பிரியதர்ஷனி, டி., விஜயபால, எஸ்., மற்றும் சமரவிக்ரம, ஆர். (2023). பருத்தி துணிகளுக்கான இயற்கை சாயங்களின் நீர் பிரித்தெடுத்தல் மற்றும் சாயமிடுதல் நடத்தை. இலங்கை தொழில்நுட்ப நிறுவனத்தின் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, கொழும்பு, இலங்கை. டிசம்பர் 14-15

## 2.2 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

### 2.2.1. சவால்கள்

1. அபிவிருத்தி வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற போது தேவையான உகந்த பௌதீக வசதிகள் இல்லாதது, அதாவது, அதிகாரிகளுக்கான அலுவலக வசதிகள், உபகரணங்கள் மற்றும் பொருட்களை வழங்குவதற்கும், தேவைக்கேற்ப போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் திணைக்களத்திற்கு போதுமான நிதி இல்லாதது ஒரு சவாலாக இருந்தது.

2. கறுவா அபிவிருத்தி திணைக்களத்தில் நிறுவப்பட்டதன் மூலம், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விஞ்ஞான சேவை உத்தியோகத்தர்கள் அந்தத் திணைக்களங்களில் இணைக்கப்பட்டதன் காரணமாக சில மாவட்டங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிறைந்த சூழ்நிலைகளுக்கு வழிவகுத்தது.

3. தாவரங்களின் வளர்ச்சி மற்றும் இனப்பெருக்க நடத்தையை நேரடியாகப் பாதிக்கும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளுக்கு தீர்வுகளைக் கண்டறிவது ஏற்றுமதி விவசாய ஆராய்ச்சித் அலகிட்கு சாட்டப்பட்டுள்ள ஒரு சவாலாகும். மதிப்புச் சங்கிலியில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் பொருட்டு சந்தை அடிப்படையிலான ஆராய்ச்சி மற்றும் சமூக ஆராய்ச்சியை அதிக அளவில் நடத்த வேண்டிய அவசியம் உள்ளது. மேலும், எதிர்கால

ஆராய்ச்சியின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த, ஏற்றுமதி விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான உள்கட்டமைப்பு மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய தீர்வுகள் காணப்பட வேண்டும்.

### 2.2.2. எதிர்கால இலக்குகள் / நோக்கங்கள்

- 2025 முதல் 2030 வரை ஏற்றுமதி அளவை 30% அதிகரித்தல்

  ஏற்றுமதி பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் ஏற்றுமதி அளவை 30% அதிகரிக்கும் இலக்கை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக, காலநிலை நிலைமைகளுக்கு எதிர்ப்புத் திறன் கொண்ட வகைகள் மற்றும் செய்கை நடை முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதனை பின்பற்றுவதன் மூலம் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இதன் கீழ்,கோப்பி மற்றும் கோகோ இறக்குமதியை 25% குறைத்து,அந்தப் பயிர்களை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

- ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல்.

  2030 ஆம் ஆண்டாகின்ற போது ஏற்றுமதி வருவாயை 80% இனால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது,அதனால் இந்நோக்கத்தை அடைவதற்காக விற்பனைச் சங்கிலி மற்றும் சந்தையை மேம்படுத்துதல்,பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் போன்ற திட்டங்களை செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. இதன் கீழ், சர்வதேச தரங்களை பூர்த்தி செய்யும் பொருத்தமான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், தரப்படுத்தலை அதிகரிக்க ஆய்வக வசதிகளை மேம்படுத்துதல், தொழில்முனைவோர் தொழில்களைத் ஆரம்பிக்கவும் பராமரிக்கவும் தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கு ஏற்ற சுற்றுச்சூழல் நிலைமைகளை உருவாக்குதல், ஏற்றுமதி விவசாய பயிர் துறையில் புதிய சந்தை வாய்ப்புகளை அடையாளம் காணுதல், சந்தை தடைகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றுக்கான தீர்வுகளை முன்மொழிதல் போன்றன மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன. புதிய பயிர்களை சாத்தியமான பயிர்களாக அடையாளம் காண்பதற்கான சந்தை வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

- ஏற்றுமதி விவசாய பங்குதாரர்களின் திறன் மேம்பாடு

  ஏற்றுமதி விவசாயப் பயிர் பங்குதாரர்களின் அறிவு, மனப்பான்மை மற்றும் வளங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் ஏற்றுமதி விவசாயப் பயிர்களுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. விரிவாக்க சேவையின் தொழில்நுட்ப திறன்களை வலுப்படுத்தும் பொருட்டு டிஜிட்டல் மயமாக்கல் மூலம்

புதிய ஏற்றுமதி விவசாய பயிர் விரிவாக்க செயன் முறையை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. 2025 முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள தூய்மை இலங்கை திட்டத்தின் Clean Sri Lanka கீழ் திணைக்களத்தினால் செயல்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பொருட்டு திட்டங்களுக்கு இதுவரை பயன்படுத்தப்படும் நீட்டிப்பு முறை டிஜிட்டல் மயமாக்கல் மூலம் துரிதப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், திறன் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், சேவை பதிப்பு மையம் மூலம் NVQ நிலை சான்றிதழ்களை வழங்குவதற்கான பயிற்சித் திட்டங்களை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் துறையில் அறிவுப் பரிமாற்றத்திற்கான முறையான செயல் அமைப்பை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பணிச்சூழலை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

- ஏற்றுமதி விவசாய பயிர் துறையில் சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துதல்.
  ஏற்றுமதி விவசாய பயிர் துறையில் தற்போதுள்ள சட்ட கட்டமைப்பை ஆய்வு செய்து தேவையான பரிந்துரைகளை வழங்கவும், அதன் செயல்பாடு மற்றும் மதிப்பீட்டிற்கான விரிவான கட்டமைப்பை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது.

- திணைக்களத்தில் இருந்து கறுவாச் செய்கை நீக்கப்பட்டதோடு ஏனைய ஏற்றுமதி விவசாய பயிர்களின் செய்கையை அபிவிருத்தி செய்தல்.
  அடுத்த சில ஆண்டுகளில், தோட்டத் துறையில் பெரிய அளவில் மிளகு,கோப்பி,கொக்கோ,மற்றும் வெண்ணிலா போன்ற பயிர்களின் செய்கையை விரிவுபடுத்தவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு இதற்காக, தோட்டத் துறையிலும், சாத்தியமுள்ள பிற பகுதிகளிலும் ஏற்றுமதி விவசாய பயிர் செய்கையை பிரபலப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக,தோட்டத் துறையில் ஏற்றுமதி விவசாய பயிர்களின் செய்கையை பெரிய அளவில் விரிவுபடுத்துவதற்காக,தோட்டத் துறையின் மேல்நில முகாமை மட்டத்திலும் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் மற்றும் பட்டறைகள் நடத்துவதற்கும் மற்றும் சகல அதிகாரிகளும் இதற்கு உச்ச அளவில் பங்களிப்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

- ஏற்றுமதி விவசாய பயிர்களுக்கான சுற்றுலா ஊக்குவிப்பு திட்டங்களை நடத்துதல்.
  சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய ஏற்றுமதி விவசாயப் பயிர்களை ஊக்குவிப்பதற்காக வாசனைத்திரவிய தோட்டங்கள்,கோப்பி கடைகள்Coffee Shop, மற்றும் மசாலாப் பொருள் பூங்காக்களை Spice Park நிறுவுவதன் மூலமும், இதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதன் மூலமும், ஏற்றுமதி விவசாயப் பயிர்த் துறைக்கு சுற்றுலாவை ஈர்ப்பதன் மூலம் அதிக வருமானம் ஈட்டப்படும் என்றும், அந்தத் துறையில் வேலைவாய்ப்புகள் உருவாக்கவும் எதிர்பார்க கப்படுகின்றது.

- ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதே ஏற்றுமதி விவசாய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் முக்கிய குறிக்கோளாகும். எனவே, விவசாயத் துறைகளில் நிலையான விவசாய நடைமுறைகளை ஊக்குவிப்பதும், மேம்பட்ட நவீன தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதும் முக்கியம் ஆகும். காபி, கிராம்பு நெட்டி,சாதிக்காய்,கொக்கோ, வெண்ணிலா மற்றும் சிட்ரஸ் பயிர்கள் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது அத்தியவசியமாகஜம். எதிர்கால ஆராய்ச்சியைத் திட்டமிடவும், ஆராய்ச்சித் தரவைச் சேமிக்கவும் நிர்வகிக்கவும் டிஜிட்டல் மயமாக்கலைப் பயன்படுத்துவது எதிர்கால இலக்காகும். ஆராய்ச்சியில் குறைந்த மூலதன முதலீட்டின் சிக்கல்களைக் குறைக்க, ஏற்றுமதி விவசாய ஆராய்ச்சிக்காக வெளிப்புற தொழில்துறை நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டும். ஆராய்ச்சி ஆய்வகங்களுக்கான அங்கீகாரச் சான்றிதழ்கள் உட்பட ஆய்வகங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சிபார்சுசெய்கின்றேன



எம்.கே.எஸ். ஆர்.டி. சமரசிங்க,
பணிப்பாளர் நாயகம் (க.பா),
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

அனுமதிக்கின்றேன்.



டி.பி.விக்ரமசிங்க
செயலாளர்
விவசாய,கால்நடைவளங்கள்,காணிமற்றும்
நீர்ப்பாசனஅமைச்சு

# அத்தியாயம் 03

## 3.1. நிதி செயல்திறன் கூற்று

2024.12.31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்றகான

ACA-F

| திருத்திய வரவு செலவு திட்டம் 2024 | விடயம் | குறிப்பு | உண்மையான 2024 | உண்மையான 2023 | |
|---|---|---|---|---|---|
| - | வருமான பெறுகைகள் | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | பொருட்கள் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| - | வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | ACA 1 |
| - | வரியல்லா வருமானங்கள் மற்றும் ஏனைய | 4 | - | - | |
| - | மொத்த வருமான பெறுகைகள் A | | - | - | |
| - | வருமானமல்லா பெறுகைகள் | | - | - | |
| 1,397,292 | திறைசேரி கட்டுநிதி | | 1,306,306,000 | 1,272,125,000 | ACA 3 |
| | வைப்புக்கள் | | 110,166,003 | 239,124,066 | ACA 4 |
| 35,000,000 | முற்பனக் கணக்குகள் | | 59,302,706 | 48,021,175 | ACA 5/5(a) |
| | ஏனைய பெறுகைகள் | | | | |
| 36,397,292 | மொத்த வருமானமல்லா பெறுகைகள் (B) | | 1,475,774,709 | 1,559,270,241 | |
| 36,397,292 | மொத்த வருமான பெறுகைகள் + மொத்த வருமானமல்லா பெறுகைகள் (C) = (A) +(B) | | 1,475,774,709 | 1,559,270,241 | |
| | திரைசேறி பெறுகை | | 54,301,524 | 21,496,362 | |
| | தேறிய வருமானம் பெறுகைகள் C) = (A) +(B) | | 1,421,473,185 | 1,537,773,879 | |
| | கழி : செலவினங்கள் | | | | |
| | மீண்டுவரும் செலவுகள் | | | | |
| 898,490,000 | கூலி, சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் | 5 | 840,940,616 | 744,889,990 | ACA 2(ii) |
| 120,000,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 79,476,571 | 81,163,045 | |
| 18,000,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 12,190,219 | 12,995,560 | |
| | வட்டி செலுத்துதல் | 8 | | | |
| | ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 9 | | - | |
| 1,036,490,000 | மொத்த மீண்டுவரும் செலவுகள் (D) | | 932,607,406 | 839,048,595 | |
| | மூலதனச் செலவு | | | | |
| 43,000,000 | மூலதன சொத்துக்களின் புனர்நிர்மானம் மற்றும் மேம்பாடு | 10 | 39,204,810 | 22,269,232 | |
| 45,000,000 | மூலதனச் சொத்துக்களின் சுவீகரிப்பு | 11 | 39,165,440 | 4,146,346 | |
| 400,000,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 369,931,717 | 387,697,746 | |
| | நிதிச் சொத்துக்களின் சவீகரிப்பு | 13 | | | ACA 2(ii) |
| 1,000,000 | இயலுமை கட்டமைப்பு | 14 | 478,978 | 792,433 | |
| 28,000,000 | ஏனைய மூலதனச் செலவுகள் | 15 | 21,934,062 | 6,412,910 | |
| 517,000,000 | மெத்த மூலதனச் செலவுகள் (E) | | 470,715,007 | 421,318,667 | |
| | பிரதான பேரேட்டுச் செலவுகள் (F) | | | | |
| | கொடுப்பனவுகள் வைப்பிலிடல் 14 | | 47,314,985 | 315,896,357 | ACA 4 |
| 50,000,000 | முற்பன கொடுப்பனவு | | 54,141,150 | 46,797,548 | ACA 5/5(a) |
| 50,000,000 | பிரதான பேரேட்டுச் செலவு F | | 101,729,135 | 362,693,905 | |
| 1,603,490,000 | மொத்த செலவு G= (D+E+F) | | 1,505,051,548 | 1,623,061,167 | |
| | 2024 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த கட்டுநிதி மீதி H=(C-G) | | (83,578,363) | (85,247,288) | |
| | கட்டுநிதிக்கு அமைய இருப்பு | | 3,204,936 | (85,247,288) | ACA 7 |
| | டிசம்பர் 31 கட்டுநிதி மீதி | | (83,578,363 | ------- | ACA 3 |

## 3.2. நிதி நிலைமைக்கூற்று

2024 டிசம்பர் 31 ஆம் திகதி அன்றுள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று

அறிக்கை II

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2024 ரூபா | 2023 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அல்லாத** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | அறி-6 | 1,476,642,590 | 1,448,474,902 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | அறி-5.5(அ) | 134,089,013 | 28,977,569 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | அறி-3 | - | - |
| மொத்த சொத்துக்கள் | | 1,610,731,603 | 1,577,452,471 |
| **தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு** | | | |
| திரட்டுசேரிக்கப்பட்ட தேறிய சொத்துக்கள் | | 18,177,273 | 19,12[illegible],784 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,476,642,590 | 1,448,474,902 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | அறி-5(ஆ) | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | அறி-4 | 72,706,804 | 9,855,785 |
| தீர்க்கப்படாத தடைப்பணிமுறையான நிதி | அறி-3 | 3,204,936 | - |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 1,610,731,603 | 1,577,452,471 |

பக்க இலக்கம் ...01... முதல் ...14... வரை அறிக்கை 1 முதல் அறிக்கை 7 வரையான நிதிக் கூற்றுகளின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ...35... முதல் ...52... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் ஒரு பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு [illegible] மேற்கொள்ளப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் [illegible] நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன [illegible] இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிர்வாகத்தினை வினைத்திறனுள்ள உள்ளக நிர்வாகக் கட்டுப்பாட்டு [illegible] நிதி நிர்வாகத்திற்காக உள்ளக நிர்வாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் [illegible] தொகுதியை [illegible] மாற்றங்களை மேற்கொள்வதற்கும் [illegible] மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2025/03/17

| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
|---|---|---|
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : | திகதி : | திகதி : 28/2/2025 |

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

M.K.S.R.D. Samarasinghe
Director General (D.C)
Department of Export Agriculture
1095, Galaha,
Peradeniya

## 3.3 நிதிப்பாய்ச்சல் கூற்று

### 2024 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

| விடயம் | உண்மையான 2024 | 2023 |
|---|---|---|
| இயக்கச் செயற்பாடுகளில் இருந்தான நிதிப்பாய்ச்சல் | | |
| மொத்த வரி பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், அபராதம் அபராதங்கள் மற்றும் உரிமங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானமல்லா பெறுவனவுகள் | | |
| பிற வருமான தலைப்பு கூட்டப்பட்ட வருமானம் | 96,196,223 | 101,548,526 |
| கட்டு நிதி பெறுகை | 1,306,306,000 | 1,272,125,000 |
| முற்பணம் அறவிடல் | 49,092,927 | 49,036,854 |
| வைப்புக்கள் பெறுதல் | 110,166,003 | 239,124,066 |
| இயக்கத்தில் இருந்து உருவாக்கப்பட்ட மொத்த காசு (a) | 1,561,761,153 | 1,661,834,447 |
| கழி : பகிருவதற்கான காசு | | |
| ஆளுக்குரிய வேதனாளிகள் மற்றும் இயக்க கொடுப்பனவுகள் | 917,614,697 | 822,708,145 |
| மானியங்கள் மற்றும் பரிமாற்ற கொடுப்பனவுகள் | 12,190,219 | 12,995,560 |
| பிற செலவு தலைப்பு மேற்கொண்ட செலவு | 52,654,154 | 27,738,095 |
| நிதி செலவுகள் - திறைசேரிக்கு கட்டுநிதி செலுத்தல் | 54,301,524 | 21,496,362 |
| முற்பனக் கொடுப்பனவுகள் | 54,935,400 | 46,595,756 |
| வைப்புக்கள் | 47,314,985 | 315,896,357 |
| இயக்கப்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மொத்த பணம் (b) | 1,139,010,979 | 1,247,430,275 |
| இயக்க செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் C=(a)-(b) | 422,750,174 | 414,404,172 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிதிப்பாய்ச்சல் | | |
| வட்டி | | |
| பங்கிலாபம் | | |
| பங்கிலாப செயன்முறை மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | | |
| கடனிலிருந்து மீட்டெடுப்புகள் | | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்த பணம் (d) | | |
| கழி : காசு பகிர்வு | 419,545,238 | 414,404,172 |
| பௌதீக சொத்துக்களின் கொள்வனவு மற்றும் நிர்மானம் மற்றும் ஏனைய முதலீடுகளின் சுவீகரிப்பு | 419,545,238 | 414,404,172 |
| முதலீட்டு செயற்பாடுகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த காசு (d) | | |
| முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் F=(d)-(e) | | |
| இயக்க செயற்பாடுகள் மற்றும் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து தேறிய நிதிப்பாய்ச்சல் g=(c)+(f) | 3,204,936 | |
| நிதி செயற்பாடுகளில் இருந்தான நிதிப்பாய்ச்சல் | | |
| உள்நாட்டு கடன் | - | - |
| வெளிநாட்டு கடன் | - | - |
| கொடைகள் | | |
| நிதி செயற்பாடுகளில் இருந்தான மொத்த காசு உருவாக்கம் (h) | - | - |
| கழி: காசு செலவினங்கள் | - | - |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பனக்கணக்கு செலுத்துகை | | |
| வைப்புக் கணக்கு செலுத்தல் | | |
| நிதிச் செயற்பாடுகளுக்கான மொத்த காசு பகிர்வு (i) | - | - |
| நிதிச் செயற்பாடுகளில் இருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (j)=(h)-(i) | - | - |
| காசு தேறிய அசைவுகள் (k)=(g)-(j) | - | - |
| ஜனவரி 1 ஆம் திகதி அன்று ஆரம்ப மீதி | - | - |
| டிசம்பர் 31 ஆம் திகதி அன்று காசு மீதி | | |

## 3.4 நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 3.5. வருமான சேகரிப்புகளின் செயலாற்றுகை (ரூ.000)

| வருமான குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ருபா) | இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக |
| 2002-01-01 | அரச கட்டட வாடகை | 2600 | 2600 | 3209.1 | 123.4 |
| 2002-02-99 | கடன் வட்டி மற்றும் ஏனைய | 5500 | 5500 | 5418.07 | 98.5 |
| 2003-01-00 | விற்பனை மற்றும் கட்டனம்-திணைக்கள விற்பனைகள் | 45700 | 55000 | 47609.3 | 86.56 |
| 2003-02-99 | விற்பனை மற்றும் கட்டனம்-நிர்வாக கட்டணம் மற்றும் செலுத்தல்கள் நானாவித | 250 | 1000 | 97.5 | 9.75 |
| 2003-99-00 | விற்பனை மற்றும் கட்டனம்-ஏனைய பெறுகைகள் | 3000 | 3000 | 1980.26 | 66.00 |
| 2006-02-02 | மூலதன சொத்து விற்பனை | 00 | 00 | 70.0 | |

## 3.6 ஒதுக்கிட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை (ரூ.000)

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு முடிவுறுத்தப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் விகிதமாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | | |
| மீண்டுவரும் | 933,000 | 1,036,490 | 932,607.4 | 89.98 |
| மூலதனம் | 517,000 | 517,000 | 470,715.0 | 91.05 |
| மொத்தம் | 1,450,000 | 1,553,490 | 1,403,322.4 | 90.35 |

## 3.7 நி.பி. 208 பிரகாரம் ஏணனய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு (ரூ.000)

| தொ. இல | அமைச்சு/திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு பெற்றுத்தரப்பட்ட இறுதி ஒதுக்கீட்டின் விகிதமாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப | இறுதி | | |
| 01. | தோட்ட அமைச்சு | | 36686 | 16686 | 8197.4 | 49.1 |

## 3.8. நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை (ரூ.000)

| ஆதன குறியீடு | விபரக் குறியீடு | 2024.12.31 திகதிய சுற்றாய்வு சபை அறிக்கை படி மீதி | 2024.12.31 திகதிய நிதிநிலமை அறிக்கை படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிடப்பட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்ற விகிதம் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 5,474,78.0 | 5,474,78.0 | | 100 |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 341,151 | 341,151 | | 100 |
| 9153 | காணி | 5,880,13 | 5,880,13 | | 100 |
| 9154 | அருவமான சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | | | | |

3.9.

CPCG/KD/F/DEA/C/2024/60 2025.05.09

கணக்கீட்டு உத்தியோகத்தர்
ஏற்றுமதி விவசாய திணைக்களம்

தலைப்பு -289 ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆவது பிரிவிற்கு அமைய கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்று

1.1 நிலபரகூற்றை கணக்கிடுவதற்கான அபிப்பிராயம்

தலைப்பு -289 ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை உரிய திகதியில் வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் தாக்கங்கள் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களின் 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலமைகள் மற்றும் அன்றைய திகதி முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதி பிரளாய்வுகளுக்குரியதான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் அடிப்படைக்கு அமையவே பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளுக்கு இயைய உண்மையானதும் சாதாரனமானதுமான நிலைமைகள் பின்பற்றப்படுகின்றது என நான் நன்கு அறியேன்.

1.2 நிலபரகூற்றை கணக்கிடுவதற்கான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களுக்கு அமைய எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் நிலபரக்கூற்று கணக்கிடப்பட்டது, இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இயைய தன்னால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள்

தொடர்பில் எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் கணக்காய்வாளரது பொறுப்புக்கள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதியதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 விடயத்தை முக்கியத்துவப்படுத்துதல் - நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் அடிப்படையில்

---

இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கு உரிய குறிப்பு 1 இன் பால் உங்கள் கவனத்தை ஈர்க்கின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசாங்க நிதிப்பிரமானம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதிய திருத்தம் செய்யப்பட்ட 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கீட்டு வழிகாட்டல் இலக்கம் 06/2024 இற்கு அமைய ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் பாராளுமன்றம் ஆகியவற்றின் தேவைப்பாட்டின் பொருட்டு மாத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கத்தின் பொருட்டு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கை ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தில் பயன்படுத்தவதற்கு மாத்திரம் நோக்காகக் கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்ப்படமாட்டாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

அரசாங்க நிதிப்பிரமானம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதிய திருத்தம் செய்யப்பட்ட 2024 டிசம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்கீட்டு வழிகாட்டல் இலக்கம் 06∴2024 இற்கு அமையஅளவுசார்ந்த தன்மை தொடர்பில் சாதாரன நிலமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுதல்கள் காரணமாக ஏற்படக்கூடிய தவறுதலான கூற்றுக்களாகவன்றி நிதிகூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலுமாகின்ற வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தர்களது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிபட்டுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

---

சுருக்கமாக நிதிக்கூற்றுக்கள், வஞ்சனை மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற போதிய தவறான கூற்றுக்களாகவன்றி நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளல் மற்றும் எனது

அபிப்பிராயத்தை உட்படுத்தி கணக்காய்வு அறிக்கை வெளியிடுதல் எனது நோக்காகும். நியாயமான முறையில் சான்றுபடுத்துதல் உயர் மட்டத்திலான சான்றுபடுத்துகையாக இருந்தாலும், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கணக்காய்வு மேற்கொள்கையில் அது எவ்வேலையிலும் தகவல்கள் கூற்றுக்களாகவன்றி இல்லை என்பதை உறுதி செய்யப்படுவதில்லை. வாஞ்சனை மற்றும் தவறு தனியாக அல்லது கூட்டாக பாதிப்பதால் தகவல்கள் கூற்றுக்கள் அல்லாது ஏற்பட இயலும் என்பதால், இந்த கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனையாளர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பில் தாக்கம் செலுத்தலாம் என்பதை கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில் தீர்ப்பு மற்றும் தொழில் சந்தேகத்திற்கு இடமளிப்பதால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- வஞ்சனை அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதிய போலி கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்காண்கையில் மற்றும் மதிப்பீடு செய்கின்ற போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு பிரமானங்கள் திட்டமிடுகையில் வஞ்சனை மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்துக்களை புறக்கணித்துக் கொள்வதற்காக போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக் கொள்வது எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். போதிய போலியான கூற்றுக்களின் ஏற்படுகின்ற தாக்கத்திற்கும் மேலாக வஞ்சனைகளில் ஏற்படுகின்ற தாக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதுடன், நாட்பட்ட போலி ஆவணங்கள் தயாரித்தல், வஞ்சனை சிந்தனைகளை கைவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை கைவிடுதல் வஞ்சனை ஏற்படுவதற்கு காரணமக அமையும்.

- உள்ளக நிர்வாகம் வெற்றிகரமாக இருப்பது தொடர்பில் அபிப்பிராயம் வெளியிடுவதற்கு கருத்து முன் வைக்கப்பட வில்லை. ஆயினும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு செயன்முறையை திட்டமிடுதல் பொருட்டு அதிகார சபையின் உள்ளக நிர்வாகம் புரிந்து உணர்வை பெற்றுக் கொண்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமான முறையிலும் மற்றும் முாமைத்துவத்தினால் மேற்கொள்பவை தொடர்பாக வெளிப்படுத்துவதற்குமான இயலுமையை மெச்சுகின்றேன்.

- நிதி நிலமை கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளீர்ப்பின் பொருட்டு அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கள்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் சாதாரண முறையில் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ளது எனவும், வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் மொத்த சமர்ப்பிப்பினையும் பெரிதும் மெச்சுகின்றேன்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டறிதழ், பிரதான உள்ளக நிர்வாக பலயீனம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கட்டுப்படுத்தும் தரப்பினருக்கும் அறிவுருத்தப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.6.1 நிதியல்லாத சொத்துக்கள்

----------------------------------------

(அ). மீளாய்வு ஆண்டு முடிவடையும் திகதி அன்று நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 1,448,474௬902 உம் நிதியல்லாத சொத்துக்களின் கூற்றுக்கள் (ஏசிஏ-6)

ஆரம்ப மீதியின கீழ் காட்டப்பட்டு இருந்த போதிலும் அந்த மீதி ரூபா 810,416,523 ஆகவும் மீதி பெறுமதி ரூபா 638,058,379 ஆரம்ப மீதியுடன் சேர்த்து கணக்கு வைக்கப்பட்டு இருந்தது.

(ஆ) மீளாய்வு ஆண்டின் போது செலவு ரூபா 470,236,029 இனால் வருடத்தில் மூலதனமாக்கள் ரூபா 11,225,741 ஆகும். அதாவது மொத்த நிதிச செலவு நூற்றிற்கு 2 வீதமாகும். மாதிரி பரிசோதனைகளுக்கு அமைய மூலதனச் செலவு ஆக மேற்கொள்ளப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 10,863,751 மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ). நிறுவனத்திற்கு உரிய சகல காணிகளும் நிதியல்லா சொத்துக் கூற்றுக்களில் (ஏசிஏ6) முறையான மதிப்பீட்டு பெறுமதிக்கு கணக்கிடப்பட வேண்டிய போதிலும் பெறுமதி ரூபா 155,000,000 ஆக தெல்பிடி உப ஆராய்ச்சி நிலையத்திற்கு உரிய காணி கணக்கில் வைத்திருக்க வில்லை.

1.6.2 கணக்காய்வு பொருட்டு சாட்சி இல்லாமை

---

(அ). முல்ஹால்கலே மத்திய நாற்றுமேடையின் காணி 128 பேர்ச்சஸ் காணியில் சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தியை நிர்மானிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் காணியை வழங்குவதன மூலம் நிறுவனம் பெறறுக் கொண்ட நன்மை அல்லது காணியை வழங்குவதற்கு உரிய அனுமதி, உடன்படிக்கைகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை.

(ஆ). i. 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய கொம்ட்டேரலர் நாயகம் பணிமனையினால் வெளியிடப்பட்ட
நிதியல்லா சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல் 1.1.1, 2.3 இற்கு அமைய தொழிற் தகைமைகளைக் கொண்ட மதிப்பீட்டாளர் ஒருவரின் ஊடாக நிதியல்லா சொத்துக்ளை மதிப்பீடு செய்து நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ஏசிஏ – 6) கணக்கிலிடப்பட வேண்டும். ஆயினும் மீளாய்வு ஆண்டு இறுதியில் குறியீட்டு இலக்கம் 9151, 9152, 9153 இன் கீழ் கணக்கு வைக்கப்பட்டு இருந்த மொத்த தொகை ரூபா 1,476,642,590 உம் நிதியல்லாத சொத்துக்களில் அவ்வாறு மதிப்பீடு செய்வதற்கு உறிய பெறுமதி உறுதிப்படுத்துவதன் பொருட்டு உரிய மதிப்பீட்டு அறிக்கை சாட்ச்சி கண்காய்விற்கு சமரப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

ii. அவ்வாறே மேற்போந்த வழிகாட்டலின் 1.3.1, 2.3, 4.3 பிரிவுகளுக்கு அமைய நிதியல்லாத சொத்துக்கள் ஒவ்வொறு 05 வருடத்திற்கு ஒருமுறை மதிப்பீடு செய்ய வேண்டியதுடன் அந்த பிரமானங்களுக்கு புறம்பாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தில் நிலவுகின்ற நிதியல்லாத சொத்துக்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. அதற்கான சாட்ச்சி கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

(இ) மாத்தளை மாவட்டத்தில் பணிமனை மற்றும் மாத்தளை மத்திய நாற்று மேடையில் தாவர பதிவேடுகள், மாத்தளை மாவட்ட பணிமனையின் திறன் ஏடு என்பன இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை.

2. வேறு நாளாந்த மற்றும் ஒழுங்குபடுத்துகை தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவிற்கு அமைய பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றனேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முடிவடைந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக

(ஆ) முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்கள் தொடர்பில் நான் மேற்கொண்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

| முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கையின் பக்க தொடர் | | செயற்படுத்தப்படாத பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பக்க தொடர் |
|---|---|---|---|
| தலைப்பு – 289 – ஏற்றுமதி விவசாய திணைக்களம் (154(6) அறிக்கை | | | |
| (அ) | 1.63 | தாவர பதிவேடு திறன் பதிவேடு இற்றைப்படுத்தி பேணப்படவில்லை. | 1.6.3 |
| (ஆ). | 2.1 | சட்ட ஒழுங்குகளுக்கு அமைய செயற்பட வேண்டும் என | 3.2(அ) |
| (இ) | 3.4 (ஆ) | வாகனம் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என | 4.2(ஊ) |
| (ஈ) | 3.5 (அ) | வாகனம் திறமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என | 4.2(எ) |
| (உ). | 3.2 (ஈ) | சொத்துக்கள் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என | 4.2(ஏ) |
| (ஊ). | 3.7 (இ) | தேவைப்பாட்டை இணங்கண்டு கொள்வனவு செய்ய வேண்டும். | 4.2(ஒ) |
| (எ). | 3.5 | இழப்புக்கள மற்றும் நட்டங்கள் தொடர்பில் நி.பி.104 விசாரனை நடாத்தி நட்டத்தை அறவிடல். | 4.3(அ) |
| (ஏ) | 3.4.(இ) | நாற்று மேடை உச்ச இயலளவில் செயற்படுத்தப்பட வேண்டும். | 4.4(உ) |

3. நிதி மீளாய்வு

3.1. செலவு முகாமை

அ). ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் வருடாந்த செலவு விடயம் 8 இன் பொருட்டு மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா 102,000,000 இல் ரூபா 16,603,635 இற்கான ஒதுக்கீட குறைந்த பயன்பாட்டில் இருந்ததுடன் அந்த ஒதுக்கீடுகள் மீதியானது மொத்த தேறிய ஒதுக்கீட்டின் நூறிற்கு 10 இற்கும் 91 இற்கும் இடையிலான இடைவெளியில் காணப்படுகின்றது.

ஆ). மீளாய்வு ஆண்டினுள் தபால் மற்றும் தொடர்பாடல் செலவு ரூபா 6,449,216 மேற்கொள்ளப்பட்டு இருந்துடன் தபால் தொலைத்தொடர்பு செலவுகளுக்கு உரிய செலவு விடயம் 289-2-1-0-1402 இன் கீழ் வருடாந்த தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 6,000,000 ஆகும். அதற்கு அமைய உரிய செலவின் வருடாந்த தேறிய ஒதுக்கீட்டு எல்லையை தாண்டுதலானது ரூபா 449,216 இனை 289-2-1-0-1409 வேறு செலவு விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

## 3.2. சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இயைய அமையாமை

பின்வருவன சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய இல்லாது இருந்தமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் அமைய | பெறுமதி | இனங்காமை |
|---|---|---|---|
| அ). | சட்டம்<br>1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய மேம்பாட்டு சட்டத்தின் 15 ஆம் பிரிவு | 289,964,900 | அமைச்சர் அவர்கள் கட்டளை பிறப்பிக்காமலேயே 2023 ஆம் ஆண்டு பயனாளிகளுக்கு ஏற்றுமதி மேம்பாட்டு உதவிதொகை கொடுக்கப்பட்டு இருந்தன. |
| i. | நிதிப்பிரமானம் 785(iii)ஆ | 117,112 | திருத்த வேலைகளின் தன்மைக்கு அமைய தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் சேவையை பெற்றுக் கொள்வதற்கு பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிறுவனம் மூலம் அல்லது விலை மனு கோரி மேற்கொள்ள வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. |

## 4. கண்காணிப்பு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

(அ). 2015 ஆம் ஆண்டின் பின்னர் கூட்டிணைத்த திட்டமிடல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஆ). ஏற்றமதி விவசாய திணைக்களத்தின் சகல அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக திட்டமிடப்பட் வேண்டிய போதிலும் புத்தளம் மாவட்டத்திற்கு திட்டமிடப்பட்டு இருந்த வேலைத்திட்டங்கள் 06 உம் செயற்படுத்தப்படவில்லை.

இ). செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொறு விரிவாக்கள் உத்தியோகத்தர் பிரிவுகள 14 இல் செயலாற்றுகை நூற்றிற்கு 5 இறகும் குறைவான மட்டத்திலேயே காணப்பட்டது.

4.1.2. எதிர்பார்த்த முடிவு எல்லையை பெற்றுக் கொள்ளாமை

---

(அ). புத்தளம் மாவட்டத்தில் விவசாய பயிற்சி வேலைத் திட்டங்கள் 12 உம் மற்றும் பயனாளிகள் 180 இன் பொருட்டு இலக்கை பெற்றுக் கொடுக்கப்பட்டு இருந்த போதிலும் அதன் முன்னேற்றம் பயிற்சி வேலைத் திட்டங்கள் 04 மற்றும் பயனாளிகள் 50 பேர் மாத்திரம் ஆன போதும் முன்னேற்றம் முறையே நூற்றிற்கு 33 மற்றும் நுற்றிற்கு 28 என குறைந்த வீதத்தில் காணப்பட்டது.

ஆ). ஒவ்வொறு மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் கன்று இலக்கினை வழங்கி இருந்த போதும் அதன் பொருட்டு விவசாயிகளை தெரிவு செய்து களத்தில் நடவுதல் பொருட்டு கன்றுகள் வழங்கப்பட்டு இருந்தன. ஆயினும் பௌதீக பரிசோதனையின் போது கன்றுகள் அழிந்து இருந்தமை, பராமரிக்காது காணப்பட்டமை, அறுவடை பெற்றுக் கொள்ளும் வரை பின்னூட்டல் மேற்கொள்ளாமை போன்ற காரணங்களினால் இலக்குகளின் 50% குறைந்த முன்னேற்றத்தை அவதானிக்க முடிந்தது.

(இ). ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் நாற்று மேடைகளில் கன்று உற்பத்தியின் இயலளவை தீர்மானிக்கின்ற போது அடிப்படையாகக் கொள்கின்ற அளவுருக்கள் என்ன என்பது பற்றி உறுதிப்படுத்தாமை. தற்போது அந்த நாற்றுமேடைகளில் கானப்படுகின்ற உச்ச இயலளவு மற்றும் தற்போதைய உற்பத்திக்கும் இடையே கவனத்திற்கொள்ளத்தக்க வேறுபாடு நிலவுவதுடன் அது நூற்றிற்கு 18 முதல் நூற்றிற்கு 64 வரையிலான வித்தியாசம் காணப்பட்டது. அதற்கு அமைய களப்படுத்த இயலுமான கன்றுகளின் அளவு 1,181,742 இனால் குறைந்து காணப்படுகின்றது.

(ஈ). ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பரிந்துரைக்கு அமைய மிளகு கொடி ஒன்றில் இருந்து காய்ந்த மிளகு 01 கிலோ கிராமை பெற்றுக் கொள்ள முடியும். ஆயினும் சகல தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்தி நடாத்திச் செல்லப்படுகின்ற ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் வல்பிட தசை வளர்ப்பு நிலையத்தில் உள்ள மிளகு கொடிகளில் இருந்து கிடைக்கப் பெற்ற உற்பத்தித் திறன் சிபாரிசு செய்யப்பட்ட இலக்கினை அடையாது நூற்றிற்கு 65 இனால் குறைந்து காணப்பட்டது.

(உ). ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் ஆரம்ப மற்றும் பிரதான செயற்பாடுகளான ஏற்றுமதி விவசாய பயிர் விரிவாக்களை மேற்கொள்ளப்படுவதோடு அதன் பொருட்டு கடந்த 11 வருட காலமாக ரூபா 2507 மில்லியன் செலவு செய்யப்பட்டு இருந்தன, 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகின்ற போது 05 வகையான பயிர்கள் களத்தில் காணப்படுகின்ற நில அளவு 15,875 ஏக்கரினால் அதாவது நூற்றிற்கு 21 வீதத்தினால் குறைந்து காணப்பட்டது.

(ஊ). ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பிரதான ஏற்றுமதி பயிரான கொக்கோ மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதியின் பொருட்டு 2023 ஆம் ஆண்டு ரூபா 8,8846 மில்லியன் செலவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இந்த உற்பத்தி இந்த நாட்டின் நுகர்வுக்கு தேவையான அளவு அல்லது உறபத்தி செய்வதற்கு முடியாது போனமை காரணமாக இந்த நாடு ஏற்றுமதி பயிர் இறக்குமதிக்காக செலவு நூற்றிற்கு 82 வீதம் அதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் இந்த நாடு தேவைக்கு ஏற்ப இணக்கம் செய்தல் மேம்படுத்துதல் மற்றும் ஒன்று திரட்டல் போன்ற விடயங்கள் பொருட்டு பொருத்தமான வேலைத்திட்டம் எதனையும் தயார்படுத்தி இருக்காமை காரணமாக இந்த இறக்குமதி செலவு அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்தது.

(எ). ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்கு உரிய நிலையங்கள், நாற்று மேடைகள் மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் 09 இற்கும் உரியதான காணி ஏக்கர் 15.28 எந்தவித உற்பத்தி திறனும் இன்றி பொருளாதார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாது குறை பயன்பாட்டுடன் காணப்படுகின்றன.

4.2 சொத்து முகாமை
-------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). ஏற்றுமதி விவசாய திணைக்களத்தில் பயன்படுத்தப்படுகின்ற 365 ஏக்கர் காணியில் 30 பகுதிகள் மீளாய்வு ஆண்டு இறுதியின் போதும் உரிமையை கையகப்படுத்தி இருக்கவில்லை.

ஆ). ஏற்றுமதி விவசாய திணைக்களம் பயன்படுத்துகின்ற ஏனைய அமைச்சுகளுக்கு உரிய 25 வாகனங்களை கையகப்படுத்தும் நடவடிக்கை மீளாய்வு ஆண்டு இறுதியாகின்ற போதும் மேற்கொண்டு இருக்கவில்லை.

இ). ரூபா 244,375 பெறுமதியான வல்பிட தசை வளர்ப்பு நிலையத்தில் விசிறல் நீர் அமைப்பு 03 ஆண்டு காலமாக செயலிழந்து உள்ளது.

ஈ). நாரம்வல இடைப்பயிர் மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிலையத்தில் செயற்பணியில் தென்னம் செய்கையின் கீழ் ஏற்றுமதி விவசாய பயிர் செய்கை இயலுமையை ஆராய்ந்து உள்ளடக்கப்பட்ட நிலத்தில் காணப்படுகின்ற தென்னம் மரங்களில் பெறும்பாலான மரங்கள் 50 வருடத்திற்கும் 84 வருடத்திற்கும் இடையிலான பழமை வாய்ந்த மரங்களாகும் ஆயினும் நிறுவன செயற்பாட்டிற்கு அமைய செயற்பாடு மேம்படவில்லை.

உ). மதிப்பீட்டு பெறுமதி ரூபா 3,000,000இற்கான 03 வாகனங்கள் 05 வருடங்களுக்கும் மேல் பயன்படுத்தப்படவில்லை.

ஊ). மதிப்பீட்டு பெறுமதியின் கூட்டுத்தொகை ரூபா 4,850,000 இற்கான் 05 வாகனங்கள 2-4 ஆண்டுகளுக்கிடையிலான காலப்பகுதியில் முறையற்ற மற்றும் குறைபயன்பாட்டுடன் பிரதான பணிமனையின் மாத்தளை மாவட்ட பணிமனையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

எ). திணைக்களத்திற்கு உரிய வாகனங்கள் 98 காணப்படுவதுடன் சாரதிகள் 48 பேரே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் அதனால் உரிய வாகணங்கள் திறனாக பயன்படுத்துவதற்கு முடியாது போயின.

ஏ). மாத்தளை மத்திய நாற்று மேடையின் பொருட்டு 2021 ஆம் ஆண்டு ரூபா 111,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 5000 லீட்டர் தண்ணீர் தாங்கிகள் இரண்டு 02 வருடத்திற்கும் மேல் எதிர்பார்த்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது பயனற்று காணப்படுகின்றது.

ஒ). திணைக்கள வாகனங்களுக்கு தேவையான டயர் சரியாக இனங்காணாது முடிவடைந்த ஆண்டு டிசம்பர் மாதம் மொத்தம் ரூபா 2,416,265 இற்கான டயர் 50 கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. ஆயினும் மீளாய்வு ஆண்டு இறுதியாகின்ற போது அதில் ரூபா 1,812,231 இற்கான டயர் 35 களஞ்சியசாலையில் மீதமாக காணப்பட்டது.

## 4.3. நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

அ). நி.பி.104(ஓ) இற்கு அமைய அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நட்டங்கள் இழப்புக்கள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அரசிற்குஏற்படுகின்ற நட்டங்கள் மற்றும் இழப்புக்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் நட்டங்கள் இழப்புக்கள் கூற்றில் காணப்பட்ட ரூபா 3,037,216 மீதியினுல் கடந்த 1 முதல் 10 வருடங்களுக்கு இடையிலான காலப்பகுதியினுள் ஏற்பட்ட நிகழ்வுகள் 14 இற்கு உரிய ரூபா 787,216 இனை மேலும் அறவிட வேண்டியதாக உள்ளது.

ஆ). முல்ஹால்கலே மத்திய நாற்று மேடையில் ரூபா 470,745 இற்கான பொருள் குறைபாடு காணப்பட்டது. அது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள மேற்கொள்ளப்படவில்லை.

## 4.4 முகாமைத்துவ பலயீனங்கள்

அ) 2011 செப்டம்பர் A/28 380679 இன் ஊடாக 10”X12” கறுப்புநிற பொலிதீன் உறை 100,000 இற்கு குருணாகலை உதவிப் பணிப்பாளர் பணிமனைக்கு வழங்கப்பட்டு இருந்ததுடன் கணக்காய்வு தினமான 2024 பெப்ரவரி 05 ஆம் திகதியாகின்ற போதும் அவ்வுறைகளில் 53,350 வெளியிடாது மீதியாக காணப்பட்டது. திட்டமிடலின்றி அநாவசியமாக மூலப் பொருட்களை கொள்வனவு செய்ததன் காரணமாக 13 வருட காலம் தேவையற்ற முறையில் நிதி பயன்படுத்தியமை மற்றும் தரமான பொருட்களை பயன்படுத்தும் சந்தர்ப்பம் இல்லாமல் போதல்.

ஆ) அரச உத்தியோகத்தர்களின் முற்பண “பி” கணக்கில் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் 4 பேரிடம் இருந்து 1 முதல் 5 ஆண்டுவரையான காலப்பகுதியில் இருந்து அறவிட வேண்டிய தொகை மொத்தம்ரூபா 451,079 இனையும் கடன் மீதி மற்றும் சேவையை விட்டு விலகின உத்தியோகத்தர்கள் 05 பேரிடம் இருந்தும் 1 வருடம் முதல் 20 வருடம் வரையிலான காலப்பகுதியில் இருந்து காணப்படுகின்ற அறவிடாத தொகையான ரூபா 720,136 இற்கான கடன் மீதி 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டு இருக்கவில்லை.

இ) ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் ஏற்றுமதி பயிர் விரிவாக்கல் பொருட்டு பயிர் தொடர்பான புத்தகங்கள் அச்சிட்டு வினியோகிக்கம் செயற்பாடு மேற்கொள்ளப்பட் இருந்ததுடன் அது களப்படுத்தும் பொருட்டு 1996 ஆம் ஆண்டு மதல் 2022 ஆம் ஆண்டு வரை பல்வேறு சந்தர்ப்பங்களின் போது அச்சிடப்பட்ட ரூபா 2,446,430 பெறுமதியான புத்தகங்கள் 45,540 2024 டிசம்பர் 31 ஆம் திகதி ஆகின்ற போதும் மீதமாக காணப்பட்டது.

ஈ) 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் திணைக்களத்திற்கு உரிய நாற்று மேடைகள் 12 இல் உற்பத்தி செய்யக் கூடிய உச்ச இயலளவு மட்டம் 3,005,000 கன்றுகளாகும். ஆயினும் களத்திற்கு வழங்கப்பட்ட கனறுகளின் அளவு 1,514,813 ஆகும். அதற்கு அமைய கன்று உற்பத்தி உச்ச இயலளவில் ஒப்பீட்டளவில் களத்திற்கு வினியோகிக்கப்பட் ட கன்றுகள் நூற்றிற்கு 50 இனை விடவும் குறைவாகும்.

4.5. நிலையான அபிவிருத்தி

-----------------------------------

2017 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை நிலையான அபிவிருத்தி சட்டத்திற்கு அமைய காட்டப்பட்டு இருந்த நோக்கங்கள் மத்தியில் நிறுவனத்திற்கு உரிய நோக்கங்கள் 05 இனங்காணப்பட்டு இருந்ததுடன், நிலையான அபிவிருத்தி இலக்கினை அடைந்து கொள்வதற்கு உரியவாறான வேலைத்திட்டம் மற்றும் குறிகாட்டிகள் இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

5. மனிதவள முகாமை

-----------------------------------

அ) மிளாய்வு ஆண்டில் இறுதித் திகதியன்று அனுமதிக்கப்பட்ட பதவியனியினர் மற்றும் உண்மையான பதவியனியனிருடன் ஒப்பீடுகையில் 177 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டதுடன் 10 பதவிகள் மேலதிகமாககாணப்படுவதாகவும் குறிப்பிடப்படடு இருந்த போதும் அனுமதிக்கப்பட்ட பதவியனியினர் தற்போதைய செயற்பாடுகளை மற்றும் மீளாய்வுக்கு உட்பட்டு திருத்தம் செய்யப்பட வேண்டும் என அவதானம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. விபரம் பின்வருமாறு

| சேவை வகுதி | அனுமதிக்கப்பட்ட பதவியனியினர் | தற்போதைய பதவியனியினர் | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i. சிரேஷ்ட மட்டம் | 81 | 61 | 20 | - |
| ii. மூன்றாம் நிலை மட்டம் | 29 | 08 | 21 | - |
| iii.இரண்டாம் நிலை மட்டம் | 770 | 679 | 101 | 10 |
| iv ஆரம்ப மட்டம் | 34 | 289 | 35 | - |
| **மொத்தம்** | **1,204** | **1,037** | **177** | **10** |

எம்.கே.டி.என்.மாயாகடுவ
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர்
கணக்காய்வாளருக்காக

# அத்தியாயம் 04
# செயற்திறன் குறிகாட்டிகள்

## 4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்)

### 4.1.1. ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத் திட்டம்

2024 ஆம் ஆண்டு, பொதுத் திறைசேரியின் ஊடாக ஏற்றுமதி விவசாய பயிர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரியினால் பெற்றுத் தரப்பட்ட ரூபா 400.00 மில்லியன் ஒதுக்கிட்டினால் நடுகை பரப்பளவை அதிகாரித்தல், மத்திய நாற்றுமேடை அபிவிருத்தி, திறன்மேம்பாடு, பெறுமதி சேர்க்கப்பட்ட வேலைத்திட்டம், தொடர்பாடல் வேலைத்திட்டங்கள், இயலுமை மேம்பாட்டு வேலைத்திட்டம். நிர்வாக செலவுகள் ரூபா 368.0723 அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு செலவு செய்யப்பட்டன.

| வேலைத்திட்டம் | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு | இலக்குகள் |
|---|---|---|
| பயிர்ச் செய்கை பரப்பளவை மேம்படுத்தும் வேலைத்திட்டம் | 192.82 | • புதிய செய்கை நிலம் ஹெக்டேர - 1731<br>• சிறு அளவிலான வீட்டுத் தோட்ட கன்றுகள் -1,121,666<br>• பாக்குச் செய்கை – பாக்கு கன்றுகள 1,662,200 |
| மத்திய நாற்று மேடை அபிவிருத்தி | 12.50 | • பாக்கு விதை கொள்வனவு- 136,500<br>• சாதிக்காய் விதை கொள்வனவு - 12,390<br>• பச்மென்ட கோப்பி - 18.75கி.கிராம்<br>• 8''x5" பேக் கொள்வனவு - 900,000<br>• பாத்திர ஊடகம்- 275 கியுப்.<br>• பண்ணை உபகரண கொள்வனவு - 161 |
| ஏற்றுமதி விவசாய பயிர் திறன் மேம்படுத்தும் வேலைத்திட்டம் | 47.72 | • கைவிடப்பட்ட கன்று பெற்றுக் கொடுத்தல்- 6082ஹெ.<br>• விலங்குகளின் பாதிப்புக்கள் தவிர்த்தல்- 32அலகு<br>• சிறுநீர்ப்பாசனம்- 35 அலகு<br>• தரவநாசினி கொள்வனவு– 1650கி.கிராம்<br>• பீடை நாசினி– 50லீட்டர்<br>• தெளிப்பான்கள் கொள்வனவு - 20 |
| பெறுமதி சேர்க்கப்பட் வேலைத்திட்டம் | 43.80 | • GAP சானிறிதழ் வழங்கள் -50<br>• நிகழ்ச்சித்திட்டம் - 05<br>• அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப உபகரணம150<br>• சந்தை மேம்பாடு - 03<br>• தரச் சான்றிதழ் வழங்குதல்- 04<br>• பங்குதாரர் பதிவு செய்தல- 10,000<br>• அறிவூட்டல் பட்டறை - 05 |
| ஊடக மற்றும் தொடர்பாடல் | 20.00 | • ரூபவாஹினி நிகழ்ச்சி -51<br>• வானொலி நிகழ்ச்சி - 102<br>• ஏனைய நிகழ்ச்சிகள் - 52<br>• கன்காட்சிகள் -10<br>• துண்டுப்பிரசுரங்கள் அச்சிடல்- 500,000<br>• தொழில்நுட்ப வெளியீடுகள்- 30,000 |

| | | |
|---|---|---|
| | | • என்மான பிரசுரங்கள்- 100<br>• சுவரொட்டிகள் - 25,000<br>• அறிவித்தல்கள் - 20 |
| திறன் அபிவிருத்தி | 8.00 | • விவசாயிகளுக்கான பயிற்சி 1,730<br>• களநாட்கள்270<br>• பயனாளிகள் - 40,000<br>• உத்தியோகத்தருக்கான பயிற்சி - 37<br>• ஏனைய பயிற்சிகள்-10<br>• விவசாய பயிற்சி - 10<br>• கருத்தரங்கு மற்றும் பட்டறை - 08 |
| 2024 ஆம் ஆண்டு கறுவாச் செய்கை அபிவிருத்தி வேலைத்திட்டம். | 63.16 | • கறுவா நடுபவர்களுக்கான கொடுப்பனவு- கறுவா கன்றுகள் 3,508,825<br>• கறுவா கன்று வினியோகித்தல் -385ஹெ |
| நிர்வாகச் செலவுகள் | 12.00 | |
| மொத்த ஒதுக்கீட்டின் அளவு | 400.00 | |

2024 ஆம் ஆண்டு திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற புதிய செய்கை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் மிளகு371.5 ஹெக்டேயர், அராபிகா கோப்பி 180.04 ஹெக்டேயர், கொக்கோ 444.03 ஹெக்டேயர்,கொக்கோ – 109.93 ஹெக்டேயர், கிராம்பு 45.30 ஹெக்டேயர், சாதிக்கா 48.12 ஹெக்டேயர், சிட்ரனெல்லா 2.00 ஹெக்டேயர், சேர 0.2 ஹெக்டேயர், குரக்காய் 1.40 ஹெக்டேயர், கோப்பி (அராபிகா 396.35 ஹெக்டேயர், கோப்பி (ரொபெஸ்ட்டா) 58.05 ஹெக்டேயர்,ஏலம் 66.71 ஹெக்டேயர், வெனிலா 35.40 ஹெக்டேயர், மஞ்சல் 56.23 ஹெக்டேயர், இஞ்சி 57.85 ஹெக்டேயர் நிலப்பரப்பளவில் புதிய செய்கை மேற்கொள்ளப்பட்டன. 2024 ஆம் ஆண்டு மொத்த இலக்காகக் கொண்ட செய்கை பரப்பளவு 1731 ஹெக்டேயர் ஆகும். அதில் புதிதாக செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1324.59 ஹெக்டேயர் அளவிலாகும். இது இலக்காகக் கொண்ட புதிய நிலப்பரப்பின் செய்கை விகிதம் 76.35% முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளது.

சிறு அளவிலான வீட்டுத் தோட்டச் செய்கை வேலைத் திட்டத்தின் கீழ் மிளகு 380,727 செடிகளும்,கொக்கோ 15,182 கன்றுகளும், கிராம்பு 10,989 கன்றுகளும், சாதிக்காய் 7,663 கன்றுகளும், வெற்றிலை 56,826 செடிகளும், லெமன்கிரஸ் 3,500, குரக்காய் 16,080 கன்றுகளும், கோப்பி (அராபிகா 96596கன்றுகளும், கோப்பி (ருபஸ்ட்டா) 77,035 கன்றுகளும், வெனிலா 124,053 தண்டுகளும், மஞ்சல் 665 கன்றுகள் உட்பட மொத்தமாக 529,091 செடிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. 2024 ஆம் ஆண்டு இந்த வேலைத் திட்டத்தின் கீழ் இலக்காகக் கொண்ட மொத்த கன்றுகளின் எண்ணிக்கை 899,775 ஆகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் கீழ் பாக்கு உற்பத்தியை மேம்படுத்துதல் தனிச் செய்கை, இடைச் செய்கை, கலப்புச் செய்கை என்பவற்றின் கீழ் பாக்கு கன்றுகள் மொத்தமாக 1,532,525 இவ்வேலைத் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

மத்திய நாற்று மேடையை அபிவிருத்தி செய்கின்ற போது,12,390 பாக்கு விதைகள்,18.75 கிலோ ஜாதிக்காய் மற்றும் காபி விதைகள் கொள்வனவு செய்யப்பட்டு, தாவர உற்பத்திக்காக நாற்று மேடைகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன.

நாற்று மேடைகளுக்கு 900,000 பொலிதீன் உறைகள் மற்றும் பாத்திர ஊடகங்கள் 275 கியுப் பெற்றுக் கொடுக்கப்பட்டன. கஸ்னாவா நீர் விநியோக அமைப்பின் ஸ்தாபக வேலைகள் முடிவுறுத்தப்பட்டதோடு,மேலும் மித்தேனியா பண்ணையில் ஒரு தாவர கொட்டகையின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன. மேலும், மத்திய நாற்று மேடைகளுக்கு 161 பண்ணை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு தேவையான வருடாந்த கன்றுகளின் தேவைப்பாடு நேரடியாக நடாத்திச் செல்லப்படுகின்ற நாற்று மேடைகள் 12 இன் ஊடாகவும் மற்றும் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் நாற்றுமேடைகளின் ஊடாகவும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. மத்திய நாற்றுமேடையின் பொருட்டு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் பெற்றுக் கொடுத்தல், நடுகை பொருள் மற்றும் நடுகை ஊடகம் என்பன வழங்கும் நடவடிக்கைகள் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

